# அண்ணாவின் உவமைகள்

146

தொகுத்தவர்கள்:

திரு. அன்புப்பழம்நீ

திரு. கே. வி. வீரராகவன், B. A., B. L.

மறுமலர்ச்சி நூல்நிலையம்

சென்னை-1

ஐந்தாம் பதிப்பு 1953

11594.

விலை அணா எட்டு

அன்பன் அச்சகம், சென்னை-1

# சிறப்புரை

எண்ணாத் துறைநாடி
எண்ணிப் பிறர்நலம்
ஏற்பச் செய்தான்

அண்ணாத் துரை, அறிஞன்
சொற்பெருக்கில் நற்றொடர்கள்
ஆய்ந்தெடுத்துப்

பண்ணாத் துறைஎன்ன
நூல்யாத்தார் நல்லன்புப்
பழநிச் செம்மல்

கண்ணார் புகழ்வீர
ராகவனார்! இவர்தொண்டு
நன்றே! நன்றே!

—பாரதிதாசன்

# பதிப்புரை

அண்ணாவின் பேச்சென்றால், ஆயிரம் ஆயிரமாக மக்கள் கூடிக் குழுமி கேட்டு மகிழ்வது வழக்கமாகிவிட்டது. மேடையின்மேல் ஏறிவிட்டால் அடடா! அந்த அழகிய உவமையும், அடுக்குத்தொடரும் கேட்பவர் மனததை எல்லாம் கவர்ந்து இழுக்கின்றது.

அண்ணாவின் நூல்கள் அனைத்தையும், 'திராவிடநாடு' இதழ்கள் பலவற்றையும். அண்ணாவின் பேச்சுககளையும் துருவி துருவி ஆராய்ந்து, ஆசிரியாகள் அரும்பாடுபட்டு இந்நூலை தொகுத்துள்ளார்கள். தமிழகத்தில் இந்த நூல் விரும்பி வரவேற்கப்படும் என்பதில் ஐயமில்லை அல்லவா? இந்த நூலை ஆசிரியர்கள் இயற்றுவதற்கு உரிய வகையில் உதவி செய்த தோழர்கள் க. மு துரைசாமி, தி. மகாதேவன், து. இராமலிங்கம் அவர்களுக்கும், ஆசிரியர் அவர்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியும் பாராட்டும் உரித்து.

—பதிப்பகத்தார்.

# அண்ணாவின் உவமைகள்

—0—

1. ஆசியச் சமவெளியிலிருந்து ஆடு மாடுகளை ஓட்டிக்கொண்டு, பச்சையான இடம் நாடி வந்தவர் ஆரியர் என்றுபடிக்கிறோம். அந்த நேரத்தில் திராவிடம், உலக வல்லரசுகளில் ஒன்றாகத் திகழ்ந்ததென்றும் படிக்கிறோம். ஆனால், அந்த ஆரியனின் வழிவந்தவனின் அடிபணியும் திராவிடனை இன்று காண்கிறோம்! இதனினும்கொடுமை வேறு என்ன காண வேண்டும்? குயிலுக்குக் கோட்டான் இசை கற்றுக்கொடுக்கிறது, மயிலுக்கு மந்தி நடனம் கற்றுக்கொடுக்கிறது என்றால் நம்புவரோ!

2. காவி உடையைக்கண்டு மயங்க மாட்டோம். கள்ளனும் காமுகனும் கூடத்தான் காவி அணிந்து, மக்களின் கண்களையும் மயக்க முடியும். சீலராக இருக்கி

ருரா என்பதைக் கண்டறிய, உடையை அல்ல, செயலையே கவனிப்போம்.

3. புரட்சி என்பது இயங்கும் சக்தி! அதைப் பொசுக்கிவிட யாராலும் ஆகாது புரட்சி என்பது மக்களின் போராடும்சக்தி யின் வழிவருவது. புரட்சி வாலிபத்தின் கூறு! பகுத்தறிவாளர் ஆயுதம்' பழமை விரும்பிகள், புரட்டர்கள், எதேச்சாதிகாரி கள், சர்வாதிகாரிகள் ஆகியோருக்கு நஞ்சு. எனவேதான், அததகையோர் புரட்சி என்ற சொல்லைக் கேட்டதும், மருட்சி அடைந்தேவிடுவர் நீண்டுவளர்ந்து நிற்கும் நெடுமரங்களும் அசைந்து ஆடி, அடி அறுபட்டு விழுந்து நொறுங்கும் சூருவளிவரின். அதைப்போன்றே ராணு வம், பொக்கிஷம், கர்வம், கபடம், ஆண வம், அகந்தை ஆகிய எல்லா ஆயுதங்க ளையும் ஒருங்கே படைத்துத் தனக்கு ஒப் பாரும் மிக்காரும் இல்லை என இறுமாந் துகிடந்த எததனையோ எதேச்சாதிகாரிகள் இடர்பட்டு இடிபட்டு கீழே உருண்ட

ளர், புரட்சியின்வேகத்தைத் தாங்கமாட்டாது. எனவேதான், அவர் வழி வந்தவருக்கெல்லாம் புரட்சி என்றதும் மருட்சி ஏற்பட்டு விடுகிறது. மருட்சி அவர்களைக் காப்பாற்ருது மருட்சி கொண்டோன், பலப்பல கொடுமையான காரியங்களையும் கூசாது செய்வான். எனினும், எச்செயலும் புரட்சிப் புயலில் அவனைச் சிக்கவைக்காது போகாது. இதுசரித்திரம்.

4. நாம் திராவிட நாடு திராவிடருக்கே என்று கூறும்போது, தமிழ்நாடு தமிழருக்கே என்று கூறுவதை, நாம் எந்த வகையில் ஏற்றுக்கொள்கிருேம் என்ருல் பழக்கடை செல்லும் இருநண்பர்களில் ஒருவர், "ஒருடஜன் கமலாகொடு" என்று கேட்க, மற்றவர், "ஏனப்பா ஒரு டஜன்! சிரமம், எடுத்துச் செல்ல; அரை டஜன் போதும்" என்று கேட்கிருர். அந்த முறையிலே மட்டுமே, தமிழ்நாடு தமிழருக்கே என்பதை வரவேற்கிருேம். ஆனுல்

"ஒரு டஜன் கமலா கொடு" என்று ஒருவர் கேட்க "வேண்டாம், ஆறு வாழைப் பழம் கொடு" என்று மற்றவர் கேட்டால, கேட்கப்படும் பொருளின் அளவு மட்டுமல்ல, வகையே மாறிவிடுகிற தல்லவா! அதுபோலவே, ஆரியம் அற்ற வடநாட்டுப் பிணைப்புஅற்றஇடம் வேண்டும், அது விந்தியம்வரை இருக்கவேண்டும். என்று நாம்கேட்க, அவ்வளவுதூரம் போகவேண்டாம். போகவும் முடியாது. வேங்கடம் வரை போதும், அதுதான் முடியக்கூடிய காரியம்" என்று கூறினல், கூறுபவருக்கும் நமக்கும், கோரும் பொருளிலே, அளவிலே, வித்தியாசம் என்று பொருள்.

5. அமெரிக்கக் கண்டத்தைக் கண்டு பிடிந்த கொலம்பஸ், இந்தியாவுக்குக் கடல் மார்ககம் கண்ட வாஸ்கோடிகாமா, ஆப்ரிக்காவில் மண்டலங்கள் லிவிங்ஸ்டன், அடிமை பேர்நதகததை ஒழித்த ஆபிரகாம்லிங்கன் போன்ற தொண்டர்க

ளின் பெருமையைப் பேசுவதால், படிப்ப தால், மேனுட்டவர், பலன்பெற்று வாழ் கின்றனர். இங்கு நமது புலவர் மணிகள், கோட்புலியையும், கோவணத்தை எடை போட்ட பக்தன் கதையையும் அன்றோ நமக்கு படித்துக் காட்டுகிருர்கள்!

6. அடக்குமுறை, ஒரு விசித்திரமான சக்தி. அதை உபயோகப்படுத்துவோருக் குத் துவக்கத்திலே களிப்பு அதிகரிக்கும். சவுக்கெடுத்துக் காளையின் முதுகிலே, 'சுளீர்' என அடிகொடுத்ததும், அது துள்ளி வேகமாக ஓடும்போது உண்டா கிற களிப்புப்போல, அடக்குமுறையை வீசி, எதிர்க்கட்சியினரை இம்சைசெய்து, அவர்கள் கஷ்டம் அனுபவிப்பதைக் கண்டதும், ஒருவகை களிப்புப் பிறக்கும் அதே போல முதல் தாக்குதல் அடிபட் டவனுக்கு அதிக வருத்தத்தை, சோகத்

தை, திகைப்பைத்தான் தரும். அவனிடம் அதிகாரம் இருக்கிறது. நான் என்ன செய்ய முடியும் அவனுக்கு எதிராக, என்ற எண்ணம்வரும். ஒவ்வொருமுறைசவுக்கு வீசும் போதும், காலை துள்ளுவதோடு மட்டும் நிற்காமல், துரிதமாக இருந்தால். முதல்சவுக்கு வீசியபோது உண்டான ஆனந்தம், அடுத்து சவுக்கு வீசும்போது இதேதடா தொல்லை! என்று, சலிப்பாக மாறிவிடும்—கையிலே சவுக்கு இரும்பினும், அடக்கு முறை உபயோகிப்பவருக்கும் அதே நிலைதான் ஆரம்பத்திலே அதனை உபயோகிக்கும்போது ஏற்படும் களிப்பு, அதனை அடிக்கடி உபயோகிக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டால் உண்டாகாது, சலிப்பும் இப்படியே, அடக்குமுறையைக்கொண்டே எவ்வளவு காலத்துக்குத்தான் ஆட்சியை நிலை நிறுத்துவது என்ற அச்சமும் ஏற்படும்.

7. வீரருக்கு அழகு, எதிர்ப்படும் எத்தனை ஆபத்தையும் பொருட்படுத்தாது போரிடல்!— கோழைகளின் கொள்கை, எதிர்ப்பு என்ற உடனே 'என்னுகுமோ நமது கதி' என்று பயந்து பதைபதைத்து, பாதகச் செயலையும் செய்யத் துணிவது. முன்னேயோர், முடிவில் வெற்றியும், பின்னேயோர் இறுதியில் தோல்வியும் பெற்று வந்ததாலேயே, இன்று உலகில் ஏதோ ஓரளவுக்காவது நீதியும் நேர்மையும் நிலைத்திருக்கின்றன.

8. மேல் நாட்டினர் பொருளைத் தேடிக் கொள்வதிலும், அதனைச் சரியான முறையில் பயன்படுத்துவதிலும் காலங்கழித்தார்கள். ஆனல் நம்மவர்களோ பொருளை அநித்திய மென்று கூறிக்கொண்டு அதே பொருள் தரும் சுகத்தில் வாழ்ந்தார்கள், தாழ்கின்றூர்கள்.

9. பணத்துக்கு இருக்கும் காந்த சக்தி விசித்திரமானது. அந்தச் சக்தியால் இழுக்கப்படாத பொருளே இல்லை. அரசு புகழ் எதுவும் அந்தக் காந்த சக்திக்குக் கட்டுப் பட்டுவிடுகிறது. அதுமட்டுமா? பணத்தைப் பணம் இழுக்கிறது அந்தக் காந்த சக்தியால் பணம் இருக்கிற இடத்திலேதான் பணம் சேர்கிறது என்று மக்கள் பேசுவதிலே இந்த உண்மை தொக்கியிருக்கிறது.

10 இரவு மதுரமாயிருந்த பால் காலையிலே திரிந்துவிட்டால், சாக்கடைச்சேருகிறது மாலையிலே மாளிகையிலே மனோஹரிகளின் கூந்தலுடன் கொஞ்சிய மலர் காலையிலே, கசங்கியதும் வீசி எறியப்படுகிறது குப்பையிலே! பொருள்கள் மட்டுமல்ல எண்ணங்கள், ஏற்பாடுகள், முறைகள், நீதிகள் எனும் எவையும் அப்படித்தான், காலததுக்கு ஏற்றதாக, நடைமுறைக்கு ஏற்றதாக இருக்கவேண்டும்.

11. செடியிலே மலர் கூத்தாடுகிறது, மணம் வீசுகிறது; மறுநாள் வாடுகிறது, உதிர்கிறது பிறகு, வேருெரு மலர் உதிக்கிறது இரண்டாவது மலர் பூத்திட, அந்தச செடிக்கு நீர் பாச்சி, எருவிட்டுப் பாதுகாததிடவேண்டும், அப்போதுதான் புதுமலர் கிடைக்கும். அதுமட்டுமல்ல நமது பணி! வாடிய மலரையே மீண்டும் மலரச்செய்ய முயல்கிறோம்.

12. பல காலமாக அவரை, எங்கெங்கோ 'இரவல்' கொடுத்தோம். இனியும், நமக்கும் அவருக்கும் அங்கிலேயே தானே? தமிழகம் தன் வீரப் புதல்வனே, உரிமையுடன் கூவிஅழைக்கிறது 'மகனே மாநிலமெங்கும் உரிமைப் போர் நடக்கிறது. நானே அரசியல்,பொருளியல், சமுதாய மத இயல் சகலவற்றிலும் அடிமைப் பட்டுத் தவிக்கிறேன் நீயோ, யாருக்கோ

சென்று'சேவை'செய்கிருய் வீடு திரும்பி வா! பெற்றவளைப் பார்! அவளுக்குற்ற துயர் நீக்கு! என்று கூறுகிறது.

13. தாகூரின் நாத நடையினைக் கண்டதும், சங்கை கொண்டோர் வங்கத்திலே இல்லை! அவர் மொழி, வங்கமக்கள் எவரின் விழியிலும் களிப்புத் துளி எழச செய்ததேயன்றி காய்சசலும் குளறலும் எழச் செய்யவில்லை. வங்கம் தாகூரை, உச்சிமோந்து முத்தமிட்டு வாரி அணைத்து வாஞ்சையுடன் கொஞ்சிற்று. இங்கோ எவ்வளவு எதிர்ப்பு. எத்தனை வஞ்சனை, எவ்விதமான சதிகள்! பழி எத்துணை, பகைப்பு எவ்வளவு! சிங்கமெனக் கடிக்கச் சென்ற செந்நாய் கூட்டமும், பாய்ந்து பிடுங்கிச் சென்ற ஓநாய்களும், நகைமுகங் காட்டி பகைச் செயல் புரிந்த நரிக்கூட்டமும் கொஞ்சமா?

14. வங்கத்தின் அணைப்பிலே, கவி தாகூர் வளர்ந்தார்! தமிழகத்திலே தருக்கரின் எதிர்ப்பிலே, தழைத்தது கொங்கை நாட்டு வேங்கை! தாகூர் மாசுமருவற்ற வளத்திலே உலவிய முழுமதி; சர் சண்முகம் முகிலைக் கிழித்தெறிந்த முழுமதி.

15. அரண்மனை மாடியிலே அம்சதூளிகா மஞ்சத்திலே அமர்ந்துள்ள அரிவையை அடையவேண்டி, ஆங்குச் சென்ற ஆணழகன், அகழியின் ஆழத்துக்கோ, அதிலே அலையும் முதலையின் வாய்க்கோ அஞ்சினால், யாங்ஙனம் மங்கையைப்பெற முடியும். இலட்சியமெனும் எழிலுடையாளைப் பெற்று இன்புற எண்ணுவோரிற் பலர், அகழிக்கு அஞ்சி, புறத்தே நின்று புகைபடு மனமுடன் போரிட்டுக்கொண்டே, புலம்பியோகிடப்பர், ஒரு சிலருக்கோ உழவுக்கேற்ற விளைவு எனும் மொழிவழி

நடக்கும் அறிவாற்றலுண்டு. அவர்தமைச் சலிப்பு அண்டாது. சாகசத்துக்கு அவர் பலியாகார். போலியைக் கண்டு ஏமாறுர். புல்லரின் புன்மொழி கேட்டுப் புழுங்கார். தாக்கிய வேலினைத் தூக்கி யெறிந்து விட்டுப் போர்புகின் யார்க்கும் இது நேரல் முறையே என்பது தெரிந்து, புலியுடன் போரிடுகையிலே கிலியெனும் வலிகொளல் கூடாது என்பதறிந்து, உயிர் கெடுவரை, நெடுவரைப்போல் நின்று போரிடுவர் வீரர். கட்சிப் பணியும், களத்துப் பணிபோன்றே, வீரருக்கு ஏற்றதே யன்றி, விலாவிலே விரக்திப் புழு நடமாடுவோருக்கோ, மனதிலே சுயநலமெனும் குளவி கொட்டிடுவோருக்கோ ஏற்றதன்று. சிறுசெயல்புரிய மட்டுமே தெரிந்தோர்க்குப் பெருநெறி பிடித்தலரிது, கட்சிப் பணிக்கு இத்தகைய கடமையுணர்ந்த காவலர் தேவை.

16. "நாசமாய்ப் போனவன், மணிபன்னிரண்டாகியும் தூங்கக் காணேமே" என்று கைநொடிப்புடன்கூறுவாள் கள்ளி, காம வேதனையாலும், அதனைத் தீர்த்திடும் கள்ளப் புருடனாலும், பீடிக்கப்பட்ட கள்ளிக்குக் கணவன் விழித்திருப்பதைகூடக் குற்றமெனத் தோன்றலாம். விபசாரியின் இந்த விசாரத்தைக் கண்டு, "அபசாரம் அபசாரம்" என்று கூறும் பேர்வழி ஆண்மையற்றவனாகத்தானே இருக்க முடியும்! வில்லுக்கு ஒரு அம்பு, பல்லுக்கு ஒரு எலும்பு; அதுபோல் பாதிராத்திரி வேளையில்பக்கத்துக்கோர் ஆள்தேடும் பாதகியின் மொழியைத் துச்சமெனத் தள்ளிவிடுதல் போல, நான் ஆரிய ஏடுகளின் கண்டன மொழிகளைத் துச்சமாகவே கருதுகிறேன்.

17. கடிவாளத்திற்கு வாய் திறந்த பிறகு, குதிரையின் கொட்டம் அடக்கப்

படுவது ஆச்சரியமாகுமா? மூக்கணாங் கயிற்றுக்குச் சம்மதித்த பிறகு மூலை வாரினால், சாட்டைதானே பேசும்! அது போலத்தான் கலையருவியிலே நீந்தி மகிழத் தொடங்கி விட்டால், ஆரிய நாரைகளின் கூரிய மூக்கின் வேலையும் தொடங்கும்.

18. ஒருவரை மற்றொருவர் அடிமை கொள்ள, வசியப்படுத்த, வீழ்த்த வகை பல உண்டு. வீரர்வேல் கொண்டு போரிடுவர்; தமது ஆற்றலையே, ஆதிக்க அளவு கோலாகக் கொண்டு. வீரமற்ற வஞ்சக உள்ளங் கொண்டோர், மறைந்திருந்து தாக்குவர்; மாற்றானை மாய்த்திட எம்முறையும் ஏற்றதே என்று கூறுவர். மாமரங்களுக்குப் பின்புறமிருந்து வாலியைக் கொன்ற ஆரிய இராமன்போல! நண்பனைக நடித்து நயவஞ்சகத்தால் காரியத்தை சாதிக்கும் கயவரும் உண்டு! எதிர்ப்போரின் உடன் பிறந்தாரையோ

ஏவலரையோ விலைக்குப் பெற்று, விபீஷ ஞாஸ்திரத்தால் வீரனை வீழ்த்தும் வகையுமுண்டு. மாயமொழி பேசியும் மாற்றானை மாய்ப்பதுண்டு! எதிரியின் ஏமாளித் தனத்தைத் தெரிந்து அவனைச் சாய்ப்பவருமுண்டு. உலகம் பலவிதம்.

19. கரியைப் பிடித்திழுத்துக் கரகர வெனச் சுழற்றி அடிக்கும் வீரனானாலும், காமவல்லிகளின் கடைக்கண் பார்வையாலோ புன்சிரிப்பெனும் பாணத்தாலோ அதரமெனும் அஸ்திரத்தாலோ, அடியற்ற நெடும் பனையாவதுண்டு.

20. மனிதன் கஷ்டம் அனுபவித்த போது மதவாதிகள் அவனுடைய கண்ணையும் கருத்தையும் எந்த உண்மைக் காரணத்தால் மனிதன் கஷ்டப்படுகிறானோ அந்தக் காரணங்களைக் காண ஒட்டாமல் தடுத்து கைலாயம் வைகுந்தம், காகுத்தன்

காளியாயி, ஜெபமாலே, உடுக்கை இப்படி வேறு பல பொருள்கள், முறைகள் மீது திருப்பி விட்டனர். மனிதன், திக்குத் தெரியாத கலத்தைப் போலானுன்!

21. தமிழ் வகுப்பு நடந்துகொண்டே யிருக்கும்; தெய்வயானேயை விட்டுவிட்டு வள்ளியைத் தேடிக்கொண்டு முருகன் போவதுபோல், மாணவர்கள் வாத்தியாரை விட்டுவிட்டு வெளியே போய் விடுவார்கள். ஆனுல் அந்த நிலே இன்று மாறிவி டடது, எங்கு சென்ருலும் தமிழ், தமிழர் என்ற பேச்சுகள்.

22 நாவலர்களும், பாவலர்களும், சங்க இலக்கியங்களேச் சுற்றி நாலு பக்கமும் வேலிகள் அமைத்து அங்கு எட்டாத அளவுக்கு எட்டடி உயரத்தில் எழுப்புச் சுவரை எழுப்பி வைத்துக்கொண்டு, ‘உள்ளே ஆடுதுகாளி வேடிக்கைப்பார்க்க

வாடி'' என்பது போலந் 'தொல்காப்பியத்தைப் பாரீர், அதன் தொன்மையைக் காணீர்' என்ருல், அதனிடம் யார் அணுகுவர்? சங்க இலக்கியங்களை வீட்டை விட்டு வெளியேற்றி நாட்டிலே நடமாட விடவேண்டும் நடன சுந்தரிகளாகச் சிறு சிறு பிரதிகள் மூலம் தொல்காப்பியக் கருததுக்களைத் தொகுத்துவெளியிட்டால் தான் தொல்காப்பியம் சிறுசிறு குழந்தைகளாக ஒவ்வொருவருடைய மடியிலேயும் மனதிலேயும் தவழும். ஒவ்வோர் இல்லமும் இலக்கியப் பூங்காவாகக் காட்சி அளிக்கும்.

23. சுதந்திரம் சீமையிலே தயாரிக்கப் படும் சரக்கல்ல, சன்மானமாகப் பெற! அது நாட்டுமக்களின் நாடி முறுக்கிஞல் விளையாடக்கூடிய நிலை, அதனை இங்கேயேதான் பயிரிட முடியும். ஆஞல் அந்த வயலிலே கள்ளி படர்ந்திருக்கிறது. அத

னைக்களையா முன்னம்,பயிர் இல்லை, பண்புஇல்லை, நாட்டு நலிவு போக்கும் பச்சிலை இல்லை.

24. உருவமற்ற ஆண்டவனை உள்ளன்போடு வணங்கி, ஒருவரை ஒருவர் தாழ்ந்தாமல் ஒன்றே குலம் என்ற தத்துவத்தோடு வாழுகின்ற இஸ்லாமியர்களைக் கண்ட பிறகு, ஆண்டவன் சன்னதியைக் கள்ளர் குகை ஆக்காதீர்கள் என்று பூசாரிகளைக் கடிந்துரைத்த ஏசுநாதரின் வரலாற்றைப் படித்த பிறகு, புனிதமான எண்ணமும் நிராசையும் தேவையே தவிர, நீரில் மூழ்குவதும், நீண்டதூரம் செல்வதும், ஆரியப் புரோகிதரின் ஆணைக்கு அடங்குவதும், ஆண்டவனை யடைய மார்க்கங்களல்ல என்ற அறிவுரையை, சுகபோகத்தைத்துறந்து ஆரண்யத்தில் அலைந்து, அறிவின் எல்லையைக் கண்டு அவனிக்கு எடுத்துரைத்த புத்தபிரானின் வரலாற்

றைப் படித்த பிறகு எப்படி நம்முடைய பழைய கால ஏற்பாடாகிய பார்ப்பனீயப் பலிபீடமாகிய இந்து மதத்தை ஏற்றுக் கொள்ள முடியும்?

25. தலையிலே 'பிரி பிரியாக' வர்ணத் துணியைச் சுற்றிக்கொண்டு, போர் போராக உள்ள சாமான்களின் பக்கத் திலே உட்கார்ந்து கொண்டு வட்டிக் கணக்கைப் பார்த்துக் கொண்டே வயிற் றைத் தடவிக்கொண்டுள்ள மார்வாரியை யும் பாருங்கள், பாரம்நிறைந்த வண்டியை மாட்டுக்குப் பதிலாக இழுத்துச் செல்லும் தமிழனையும் பாருங்கள். மெருகு கலையாத மோட்டாரில் பவனிவரும் சேட்டுகளையும் பாருங்கள்! கூலி வேலைக்கு வெளிநாடு செலல, கிழிந்த ஆடையும், வறண்ட தலை யும், ஒளியிழந்த கண்களும் கொண்ட தமிழன், கப்பல் டிக்கட்டுக்குக் காததுக் கொண்டிருக்கும் காட்சியையும் காணுங்

கள். இங்கே பச்சை பசேலென்று உள்ள நஞ்சை புஞ்சையையும் பாருங்கள், அதே போது நடக்கவும் சக்தியற்று, பசியால் மெலிந்துள்ள தமிழனையும் பாருஙகள், எங்களை மறந்து இந்தக் காட்சியைக் காணுங்கள்.

**26. உருட்டும் கண்! மிரட்டும் சொல்!** ஒரு காலத்திலே ஆதிக்கக் கருவிகள்.

**27.** சர். சண்முகத்தை நான் அவர் ஆற்றலறிந்தே அரசாள அழைக்காமல்- அரசு அமைக்க அழைக்கிறேன் மரத்தில் பழங்குலுங்கும் வேளையிலே, மந்தி தாவு மானல் கனியுதிரும்! அது போலக் கட்சி கனியுந் தறுவாயிலே, கடுவனுமந்தியோ களித்துக் கூத்தாடும், கனி கிடைக்கு மெனும் கருத்தினுல். ஆனல் தோட்டம் அமைத்துத் துரவு எடுதது, நீர் பாய்ச்சித் தரு வளர்த்திடும் செயலே முக்கியமானது

சர் சண்முகத்தை நானழைப்பது தீஞ்சுவை தரும் பதவிப்பலாவைப் பறித்திட அல்ல; அதற்குக் கீச்சிடும் கடுவன்களும், மையலூட்டும் மந்திகளும் என்றுமுண்டு; எங்குமுண்டு. நான் சர் சண்முகத்தை அழைப்பது திராவிடத் தனி அரசு அமைக்க; வெறும் பதவியில் அமரவல்ல.

28. உலகிலே பலபல தீவிரவாதிகள் தோன்றியது பற்றிய வரலாறுகள் எனக்குத் தெரியும். நாத்திகம் பேசும் நாவலரையும் நானறிவேன். நெறுப்பாறு தாண்டும் வீரரும் எனக்குத் தெரியும். ஆனால் அவர்களுக்கும், பெரியாருக்கும் உள்ள ஒரு பெரிய வித்தியாசத்தை உணரவேண்டுகிறேன். அவர்கள் படித்த பக்குவ மனம் படைத்த கூட்டத்திலே பேசினர். அவர்களுக்கு எழுதினர். பெரியாரின் பணி, தற்குறிகள் நிரம்பிய தமிழகத்திலே, கல் வீச்சு, மண்வீச்சுக் கிடையே, என்பதை அறிய வேண்டும்.

29. 'வர்ணாஸ்ரமம் ஒழிக' என்ற பரணியைப் பல்கலைக் கழகத்திலே, அன்று சர் சண்முகம் பாடினது 'இந்து,' 'மித்திரன்' முதலிய ஏட்டுக்கு எரிச்சலை யூட்டிற்று. பாசி படர்ந்த மனததிடம் நான் பரிசுதத்தனை எதிர் பார்க்கவில்லை எனவே அப்பத்திரிகைகளின்போக்கு எனக்குவியப் பூட்டவில்லை அவை கக்கிய கண்டனம், காச நோயாளிகளின் இருமல்போல அவைகளின் நோய்க்குள்ள குறிகளே யன்றி வேறல்ல.

30. நறுமலர்க் கூடையிலே நச்சரவு இருந்திடின், மலர்தேடும் கையிலே விஷப் பல்லன்றோ தீண்டும்!

31. சர். சண்முகம், கலையின் மேம் பாட்டினைச் சுவைக்கக் காப்பியக்கடலிலே மூழ்கிடுவதை நான் தடுக்க வில்லை. ஆனால் அக்கடலிலே ஆரிய அலை மோதுகிறது, சனாதனமெனும் சுரு மீன்கள் உலவுகின்றன. வர்ணாசிரம மென்னும் வாய கன்ற திமிங்கலமுளது என்று எச்சரிக்கை

செய்யாவிடின் எனக்கு அவர்பால் உள்ள அன்பினை மறந்தவனாவேன்.

32. கரியையக் கொண்டு கரும்பு பறிக்கச் செய்வதா? மலைமரங்களையன்றோ முறித்திடச்செய்யவேண்டும்! வேங்கையை அழைத்து விளாங்கனியை உடைந்திடச் செய்வதா? சர் சண்முகத்தின் அறிவாற்றலுக்கேற்ற காரியம் அரசாள்வதல்ல, அரசு அமைப்பது.

33. "ஊரைக் கலக்கி வைக்கும் ஊத்துக்காட்டு அம்மையே, நாட்டைக் கலக்கி வைக்கும் நல்ல பத்ரகாளியே, வேண்டி அழைக்கின்றோமே வேலாத்து அம்மையே" என்று, சிலம்பைச் சுற்றி உடுக்கை முழங்கி, உள்ளே சென்ற குடிவகை, ஆவிமயமாக வெளியே வருமளவு உரத்த குரலிலே அம்மனை வேண்டிக்கூவும், பூசாரி

களை நான் கண்டிக்கிறேன் அதன் பயனுக ஆவேசம் வரும். வந்ததும் ஊத்துக் காட்டாளோ, ரோந்துக்குடையா ளோ, பூசாரியையும் பக்தர்களையும் பார்த்து, 'ஆடு வெட்டிக் கோழி வெட்டி பூஜை ஏண்டா போடலே? ஆடி மாத நோன் புக்கு ஆறு இலை போடலே, வேண் டிக்கொண்டபடி விருந்து படைக்கவே இல்லை!' என்று கோபத்தைக் கக்கக் கேட்டிருக்கிறேன் அதுபோன்ற பூஜை போடும் முறை அரசியலிலே, மகா ஆபத் தாயிற்றே என்றல்லவா நான் அஞ்சுகி றேன்.

34. ஆண் மான் பெண் மானுக்குத் துணை நிற்கும் அழகிய காதலறத்தைக் காட்சியாக்கிய கவிதை படித்த தமிழ னுக்கு. மாரீசனின் மாய மான் கதை கலை யாக்கப்பட்டு விட்டது! முல்லை, குறிஞ்சி, நெய்தல், மருதம், பாலை எனும் நிலப்

பண்பு தெரிந்து இன்புற்ற இயல்பு முன்பு! பிறகோ நாலு வர்ணமெனும் நச்சுப் பொய்கையில் நெளியும் நிலைமை! கலையின் பேரால், ஆரியக்கற்பனைகள், தமிழரின் கருத்திலே தூவப்பட்டுவிட்டன

35. மனிதன் பறக்கக்கூட கற்றுக் கொண்டான்! பார் முழுவதையும் பாக்கட்சைஸ் ரேடியோவுக்குள் அடக்கிவிட்டான்! ஆனால் இன்னமும் பசி, பட்டினி, பஞ்சம் இன்றி எல்லோரும் வாழ வழி கண்டுபிடிக்க மட்டும் மனிதனுடைய அறிவு அவனுக்குப் பயனபடவில்லை

36 இருள் நிலைத்திருப்பதில்லை—ஒளி கிடைக்க தாமதம் ஏற்படினும், இடையே சொல்லொணாச் சங்கடம் விளையினும், விடுதலைச் சுடரொளி, எப்படியும் கிளம்பித் தன் வேலையை வெற்றிகரமாகச் செய்து வந்திருக்கிறது.

37. விடுதலைப்போர், முரசொலி அடியோடு எங்கும் எப்போதும் அழிந்துவிடுவதில்லை முரசு இருந்து, அதைக் கொட்டும் திறம் உடையோர் முன் வராமல் இருந்ததுண்டு; முரசரையும் திறமுடையார் இருந்து, முரசு அமையாது இருந்ததுண்டு. ஆனால் அடிமைப்பட்ட எந்த நாடும், எப்பாடுபட்டேனும், எத்தனை முறை தோற்றேனும் விடுதலையைப் பெறமல் போனதில்லை.

38. தோட்டத்துக் குள்ளே புகுந்த புலியை விரட்டிஅடித்துக்கொல்ல வேண்டுமென தோட்டக்காரர், தன் துணைவருடன் கூடி ஆயுதமெடுத்து, புலி தப்பி ஓடாதபடி நாற்புறமும் நல்ல முறையில் காவல் அமைத்து, தீரமாக உள்ளே நுழைந்து, புலியுடன போராடுகிறபோது, எப்படியாவது இந்தப் புலியை அடித்துக்

கொன்று விட்டால் போதும் என்றே ஒரே எண்ணம்தான் தோன்றும். புலி கொல்லப் பட்டதும், "அப்பா! கொன்றுவிட்டோம் புலியை, இனி பயமில்லை" என்ற ஆறுதல் தோன்றும்—ஆயாசமும் ஏற்படக்கூடும். அதுபோலவே பல்வேறு நாடுகளிலே விடுதலைப்போர் நடந்த காலங்களியெல்லாம், எப்படியாவது, நம்மை அடிமைப்படுத்திய அன்னிய ஆட்சியை ஒழித்து நாட்டிலே தன்னாட்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரே எண்ணம், ஒரே இலட்சியமே தலைசிறந்து விளங்கிற்று. புலியைக் கொன்ற பிறகு, தோட்டக்காரன் தன் வேலை முடிந்தது என்று எண்ணிவிடுவது போலவே—புலி புகுந்ததால் ஏற்பட்ட சேதம், புலியைக் கொல்லப் போரிட்டதால் உண்டான சேதம் ஆகியவைகளைப் போக்குவது, வேறு ஏதேனும் துஷ்ட மிருகங்கள் புகாதபடி பூது காவல் அமைப்பது போன்ற காரியங்களைக்

கூடத் தோட்டக்காரன் வெற்றிபெற்ற மகிழ்ச்சியால், கொஞ்சகாலம் பொறுத்துத்தான் செய்ய முற்படுவான். அதுபோலவே, அடிமைப்பட்டிருந்தபோது ஏற்பட்ட அவதிகளையும் அல்லல்களையும் துடைத்திடும் அரும்பணியை, விடுதலைப் போரில் வெற்றிபெற்ற பல நாடுகள் செய்யாமல் இருந்து விட்டதுண்டு—காலங் கடந்தபின் செய்யத் தொடங்கியதுண்டு.

39. தினசரியில் ஒரு படம் வந்தது, காந்தியாரின் சொத்துக்களைக்காட்ட. அந்தப் படத்தைக் கண்ட எவருக்கும் கண்ணீர் கசியாமலிராது! 'என்ன சொத்து? நூல்சரம், சிறு கரண்டி, தெர்மாஸ்பிளாஸ்க், ஒரு பவுண்டன பேனா, ஒரு ஜதை காலணி இவை. அருள் பெற்றவர்கள், யோக மறிந்தவர்கள், மக்களின் மோட்ச லோக வழிகாட்டிகள் என்றெல்லாம்

விருதுபெற்று துறவு நிலையும் கொண் டிருப்பதாகக் கூறுபவர்கள் இன்று பலர் உள்ளனரே, அவர்களின் சொத்துக்களை சற்று உங்கள் மனக்கண்முன் கொண்டு வந்து பாருங்கள்— எவ்வளவு ஆடை ஆபரணம்— தங்கத்தால் வட்டில் தட்டு முதலியன மட்டுமா? பாதக்குறடே தங் கத்தால்!

40. சங்கீதம் என்ன சார் பிரமாதம்? சாரீரம் கொஞ்சம் நன்றாக இருக்கவேண் டும், சுருதியுடன் சேர்ந்து பாடவேண்டும், தாளம் தவறக்கூடாது. இவ்வளவுதானே என்று பாட ஆரம்பிக்கும்போது தானே தெரிகிறது, சாரீரம் வித்வானுடன் ஒத் துழைக்க மறுப்பதும், சுருதியுடன் அவர் மல்லுக்கு நிற்பதும், தாளம் அவருக்குச் செய்யும் துரோகமும்! அதுபோலத்தான் சமத்துவம் சமதர்மம் போன்ற இலட்சியங் களைப் பேசுவது சுலபம், சாதிப்பது கடி னம்.

51. திசை காட்டும் கருவி தீயோனி டம்சிக்கினால் கலம் பாறையில் மோதுதல் போல, அரசுகளை ஆட்டி வைக்கும் அள வுக்கு ஆற்றல் அமைநத மேடைப்பேச்சு எனும் சக்தி சாதனம் ஒருசிலருக்கு மட் டுமே கிடைத்து, அவர்களும் அந்தச்சக்தி யைத் தவருன காரியத்துக்குப் பயன் படுத்துவதனுல், மக்களின் நலம், பாறை மோதிய கலமாகும்.

52. அலைகடலை அடக்கும் மரக்கலம் அமைத்தோர், விண்ணில் பறக்கும் விமா னம் அமைத்தோர், தொலைவிலுள்ளதைக் கேட்கவும் காணவும் கருவிகள் கண்டு பிடித்தோர், காட்டாறுகளைக் கட்டுக்குங் கொண்டுவந்தோர், நீரிலே நெருப்பின் சக்தியைக் கண்டறிந்தோர் அனைவரும் நம் போல் மனிதரே. அவர்களால் முடிந் தது, நம்மால் ஆகும் என்ற நினைப்பு அவர்களை ஊக்குவிக்கும் சக்தியாயிற்று. அவைகள் சாத்தியமானபோது, மேடைப் பேச்சா சாத்தியமாகாது? பேசாமலிருப்

பது வேண்டுமானால் சிரமம்—சிந்தையை அடக்கியே சும்மா இருப்பதரிது—பேசுவது எளிது. பேசுவதை ஒழுங்குக்கும் முறைக்கும் கட்டுப் படுத்துவதுதான் மேடைப் பேச்சு.

43. நமது கொல்லையில் காளை புகுந்து மேயக் கண்டு தூரத்தினின்றும் அதனை துரத்தினால், அது மெல்ல மேய்வதை விட்டு, அவசர அவசரமாக பயிரை அழிக்கும். கிட்டே வந்து குறுந்தடி எடுப்பின் ஓடுமுன்னம் முட்டவரும். பிறகு ஓடினாலும் நாம் ஓய்ந்தவேளையில் கொல்லையின் உள்ளே புகும். ஆனால் கொல்லைக்கு வேலி கட்டிவிட்டால் காளைக்கு வேலை இராது. பயிர் மிஞ்சும். இதுதான் தமிழகத்தைத் தனியாகக் காணவேண்டுமென நாம் கேட்பதன் காரணம்.

44. இந்துக்களோடு மொழி, கலை, நாகரிகம் இன்னபிறவற்றில் முற்றும் மாறு

பட்ட முஸ்லிம் சமூகம் ஒரு தனி இனம் என்ற அடிப்படை உண்மை ஒப்புக்கொள் ளப்பட்டதைக் கண்டு நாம் களிப்படைய வேண்டும். எப்படி? கனமான சுவற்றை பேர்த்தெறிவது கடினம். ஆனல் ஒரு கல் லைப் பெயர்த்துவிட்டால் மற்றவற்றைப் பிரித்தெடுப்பது சுலபம். பாகிஸ்தான் கிடைந்த ஒருசில ஆண்டுக்குள் நிச்சய மாக திராவிடர் தனி இனமாக திராவிட நாட்டைப் பெறுவர்.

45. புலியிடம் மான் மன்ருடி, மனம் வைதது உயிர்ப் பிச்சை அளிக்கும் படி வேண்டுவது இயற்கை, நடக்கக்கூடி யது. ஆனல் புலி, மானிடம் பயந்து அடங்கி, ஒடுங்கி, நடுங்கி உயிர்ப் பிச்சை கேட்கிறது என்ருல், இது விவேகமுள்ள பேச்சா? வெகு விசீத்திரமான தல்லவா? அதுபோலத்தான்அன்று பார்ப்பனரல்லா

தார் பார்ப்பனரிடம் தம்மை நல்ல முறையிலே வகுப்புக்கு நீதி வழங்கி நடத்தும்படி கேட்பன.

46. பண்ணைகளில் பாடுபட்டுப் பயிர் செய்வது சீரகச்சம்பா; கிச்சிலிச்சம்பா இன்னவித உயர் வகுப்புப் பயிர்கள். ஆனால் அவன் உண்பது கால்வயிற்றுக் கஞ்சியோதான். பாட்டாளி பாடுபட்டுக் கட்டுவது மாடமாளிகைகள், கூட கோபுரங்கள் போன்ற மனைகள், நான்கடுக்கு ஐந்தடுக்கு அரண்மனைகள், அவைகளை நிமிர்ந்து நோக்கினால் கழுத்து வலிக்கும். ஆனால் அவன் அண்டியிருப்பது குனிந்து நுழைய வேண்டிய குடிசை! ஏன் இந்த பேதம், இதே நாட்டில்?

47. சிறிய ஜன்னலால் போதிய காற்று கிடைக்காவிடில், அதை இடித்துப் பெரிய ஜன்னல் வைக்கிறோம். பாலம் பல மற்றதாக இருந்தால், அதை மாற்றிப் பலப்படுத்துகிறோம். ஜுரம் செந்தூரத்தி

ஞல் குணமாகாவிட்டால் ஜெர்மன் மருந்துக்கள் உட்கொள்கிறோம். இதிலெல்லாம் பழமையைக் கண்மூடிக்கொண்டு கைப்பற்றுவதில்லை. அதுபோலத்தான் கடவுளுணர்ச்சியிலும் மாற்றம்வேண்டும்; மாற்றம் செய்தாகவேண்டும்.

48. அந்த நாடுகளில் மாத்திரம்தான் என்ன? வேதாந்திகளுக்குப்பஞ்சமா? அறிவாளிகளில் பிளாட்டோ விளங்கவில்லையா? பைசாசோ ஒரு வேதவித்தகன் ஆயிற்றே' வேதாந்தத்தில் சிறந்தவனாக மாக்ஸ்முல்லர் விளங்கவில்லையா? அவர்களையும், அவர்களுடைய தினசரி வாழ்க்கையையும் பாருங்கள்! நம்முடைய சங்கராச்சாரியையும் பாருங்கள்! கைலாசப் பரம்பரையில் உதித்த தம்பிரான்களையும் பாருங்கள்!

49. ஆண்டவன் நம்மையும் படைத்தான்; பொருளையும் படைத்தான்; கடலைப் படைத்தான்; கடலுள்ளே முத்தையும்

படைத்தான்; முத்தைக் கொண்டுவரமனி தனுக்சத் திறமையையும் படைத்தான்; பூமியிலே பொன்னைப் படைத்தான்; அதை வெட்டி எடுப்பதற்கு ஆளையும் படைத் தான். "கல்லூரியிலே நீ படிக்கவேண்டும் ஆனால் நீ பரீட்சைக்குப் போகக்கூடாது" என்று ஆசிரியர் மாணவனைப் பார்த்துக் கூறுவாரா! மணம்செய்து வைத்துத் திடீ ரென்று தம்பதிகளைப் பிரித்து வைத்தால் எப்படி யிருக்கும்? அதுபோலவே படைக் கப்பட்ட பொருள் ஒவ்வொன்றும் உப யோகத்திற்காகவேதான்.

50. நம்முடைய காலத்தில் ரேடியோ வைத் திருப்பிவிட்டால் உலகம் முழுவ தும் நம் கண்முன் வருகிறது. வியாசர் கூப்பிட்டபோது வரவில்லை. நாம் கூப்பிட் டபோது உலகம் நம்முன் வருகிறது. நம் நாட்டில் எத்தனை பேருக்கு விஞ்ஞானியா கிய சர். சீ. வி. ராமனைத் தெரியும்? ஒரு

போலிப் பகல்வேஷச் சாமியாரைப் பற்றித் தெரிந்த அளவிற்குக்கூட ஸர். சீ. வி. ராமனைப் பற்றித் தெரியாதே!

51. இந்தியாவில் மழை இல்லாததால் பயிர்கள் வாட, பயிர்கள் வாடுவதால் மக்கள் வாடுகிற நேரத்தில் இந்திய சர்க்கார் மகாபாரதத்தில் சாந்தி பருவத்தை ஆராய்ச்சி செய்கிறார்கள். அமெரிக்காவில் பருவ மழை தவறினால் பருவமழையைத் தேவைப்பட்டபோது உண்டாக்க ஆராய்ச்சி செய்கிறார்கள். இரண்டுசெய்திகளும் ஒரே அச்சகத்தில் அடிக்கப்பட்டு ஒரே செய்தித்தாளில் வரக் காண்கிறோம்

52. ''ஜாதிமத பேதமில்லை'' ''எல்லோரும் சமம்'' ''எல்லோரும் இந்நாட்டு மன்னர்'' ''அடிமையென்றும்ஏழையென்றும்யாருமில்லை நாட்டினில் '' மதுரமான கீதம். செவிக்கு இனிமையான விருந்து. யாரும் பாடிவிடலாம் என்று எளிதில் கூறிவிடலாம். பாட ஆரம்பித்தால் தெரியும், சாரீரம்கெட்டியிருப்பதும்,மேளம் சத்

தம் கேட்காததும், தாளம் ஒத்துழைக்க மறுப்பதும். கீதம் பாடுவதிலே உள்ள கஷ்டத்தைவிட, கீதத்திலே உள்ள கருத்துக்களை தேசத்திலுள்ள மக்களுக்குப் போதிப்பதிலே உள்ள கஷ்டம் அதிகம்.

53. வைதீகம் என்னும் நோய்க்கு டாக்டர்கள் மருந்து கொடுத்துக் குணப்படுத்த முடியாது, பின் யாரால் அந்த நோயைப் போக்கடிக்க முடியும்? வாலிபப் பருவத்திலுள்ள மாணவர்களால்தான் முடியும். பகுத்தறிவு என்னும் ஒரேமருந்தால் வைதீகம் எனும் நோயைப் போக்கடிக்க முடியுமே தவிர வேறு எந்த மருந்தாலும் போக்க முடியாது.

54. அமெரிக்காவின் தலை நகரம் எது தெரியுமா? தெரியாது. ருஷ்யாவின் தலை நகரம் எது தெரியுமா? தெரியாது. பெர்லின் எங்கு இருக்கிறது, தெரியுமா? தெரியாது. பிரிட்டனின் பிரபல தொழிற்சாலை

எது தெரியுமா? தெரியாது. கடலுக்குள் போகிறகப்பல் தெரியுமா?தெரியாது. சரி, எமதர்மனுடைய வாகனம் எது தெரியுமா? 'அதாங்களருமைக்கடா'என்று கூறுவார்கள். தெரிந்துகொள்ள வேண்டியதைப் பற்றி வெட்கப்படமாட்டார்கள். தெரிந்து கொள்ளவும் ஆசைப்படமாட்டார்கள்.

55. களஞ்சியத்திலே புகுந்துகொண்டு தானியத்தைக் களவாடித்தின்று கொழுத்துவந்த எலி, பொறியிலே சிக்கிவிட்ட பிறகு, இரும்புக் கம்பிகளை, தானியத்தைக் கொரித்துத் தள்ளுவதுபோல செய்துவிட முடியாது என்று தெரியாமல், உயிர் பிழைக்கவேண்டுமே என்பதால், கூண்டுக்குள் இருந்தவண்ணம் குதிப்பதும், கம்பியைக் கடிப்பதும், பலகையைக் கீறுவதும் பலவித முயற்சிகள் செய்வதையும் பார்க்கிறோமல்லவா! அதுபோன்ற காட்சி, இந்த 'போக்கிடமத்துகள்' போடும் கூக்

குரலும், ஆடும் கூத்தும்! வெற்றிபெற்று வரும் சீர்திருத்த வாதிகளுக்குப் பொழுது போக்குக்கான, கண்காட்சியில் வசமாகத் தரப்படுகிறது!

56. மனு காலத்திலிருந்து அனுபவித்து வந்த ஆதிக்கம் ஒழிகிறது என்றால் ஏக்கம் பிறக்கத்தான்செய்யும்! கிளைவ் காலத்தில் பெற்ற சாம்ராஜ்யத்தை இழக்கவேண்டி வருகிறதே என்று சர்ச்சில்ஓலமிட்டது போல; இங்குள்ள சனாதன சர்ச்சில்களும் ஓலமிடுகிறார்கள்! அவர்களின் மன ஆறுதலுக்காகத்தான் பாபம்!

57. முத்துக்களைப் பெறவேண்டுமானால் கடலின் கொந்தளிப்பையும்,சுறாமீன்களின் உபத்திரவத்தையும் அகற்றிஆண்மையோடு முத்துக் குளிக்கவேண்டும்; கண்ணைப்பறிக்கும் பற்பலவித ஆபரணங்கள் செய்யத் தங்கம் வேண்டுமானால்,

பாறையின் வெடிப்பிற்கும் மணலின் சரி விற்கும் துணிந்த பல்லாயிரவர் பொற் சுரங்கங்களிலே அல்லும் பகலும் அனவரதமும் பாடுபட வேண்டியிருக்கின்றது. அது போலவேதான், ஏடுகளிலும் இலக்கியங்களிலும் சிறந்தவற்றை, நாட்டுக்கு நலம் பயக்கும் ஏடுகளை மனிதத் தன்மையுள்ளவனாக விளங்கத்தூண்டும் இலக்கியங்களை, அறிவை அகலப் பரப்பும் அந்தாதிகளையடைய முன்னம் பெரிதும் சிறிதுமான பற்பல இடுக்கண்களோடு இடறி மோத நேரிடும். பலரின் பரிதாபத்திற்கும் கேலிக்கும், கண்டனத்திற்கும் ஆளாக நேரிடும்.

58 குதிரைக்குத்தான் கூறிடும் திறமை இல்லை. குமரிகளுக்கு வாயிருந்தும் தமக்குக் கிடைக்கும் வாழ்க்கை வண்டிகளின்வக்கிரத்தை எடுத்துக்கூறி,வேண்டாம் என்று கூறமுடிகிறதா? குதிரையை

இழுத்து வண்டியிலே பூட்டுவதைப் போலத்தான், குமரிகளையும் பிணைத்து விடுகிறார்கள். வாழ்க்கைச் சவாரியும் நடந்து கொண்டு தான் இருக்கிறது. விபத்துக்கள் நேரிடும் போது, இருக்கவே இருக்கிறது. "விதி" என்ற வெட்டிப் பேச்சு. அவள் மேனியும் முகவெட்டும் அமைந்திருந்த விதம், பிறரை மயக்கும் விதமாக இருந்தது. அதோ கொடியிலே கூந்தாடும் மலரின் மணம், வண்டுகளை இழுக்கவில்லையா? காற்றின் ஒலி காட்டு மிருகங்களுக்குக் கீதமாகவில்லையா? வானத்திலே ஒளி வீசும் நட்சத்திரங்கள், கண்களுக்கு விருந்தளிக்கவில்லையா? அது போலத்தான் அவள் காண்போர் கண்களுக்கு விளங்கினாள்.

59. தானே பயிரிட்டுவரும் சொந்த நிலம், தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தை போல! நமது நிலத்தை,

கூலிக்கோ, வாரத்திற்கோ விட்டுப் பயிர் செய்வது தாதியிடம் பால் கொடுக்கச் செய்தோ, அல்லது தகர டப்பாவில் வரும் தயாரிப்புப் பால் கொடுத்தோ வள ர்க்கப்படும் குழந்தை போலத்தான். வள ராது என்று அர்த்தமில்லே; வளரும் ஆனுல் அந்தப் பாலிலே வாஞ்சை கலந்தி ருக்க முடியாது — அதுபோலவே தான் கூலிக்கோ வாரத்திற்கோ பயிரிடும் நிலத் துக்கு, எவ்வளவு வளம் ஏற்பட்ட போதி லும், உடைமைக்காரனின் சொந்தஉழைப் பும், பராமரிப்பும், கண்காணிப்பும் இல் லாமற்போனுல், அந்த நிலம் இருபோகம் தரினும் சரியான வளம் பெற்றது என்று கூற முடியாது.

60. விழலுக்கு நீர் இறைப்பானேன்; விலா நோகுதே என்று விம்முவானேன்; அலி என்று தெரியாமல் அணைப்பானேன்;

ஐயோ, சனியனே என்று ஆயாசப்படுவா னேன்!

61. கட்டையாலே கத்தியும் அட்டை யாலே கேடயமும் செய்து பிடித்துக் கொண்டால், எதிரிக்குச் சிரிப்பு வருமா ? சிந்தனே குழம்புமா?

62. கடைவீதியிலே கனி விற்பவன், அழுகிய பாகத்தை அறுத்துப் போட்டு விட்டு, மிச்சமுள்ள பாகத்தின் மதுரத் தைப் புகழ்ந்துரைத்து கிடைத்த வரையில் கிடைக்கட்டும், என்று பார்க்கிருனே அதுபோல் ஒரு சாராரும், சாம்பிள் பழம் இனிப்புத் துண்டாக கொடுத்துப புளிக் கும் பழங்களேக் கூடையிலே நிரம்பிக் கொடுத்து விடுகிருனே, அதுபோலச் சில ரும் கலே வியாபாரம் செய்கின்றனர். கனியின் தன்மையல்ல வியாபாரத்தின் காரணம், விற்பவரின் சமர்த்து.

63. ஆசையைத் தட்டி எழுப்பி விட்டு வீணையை மீட்டத் தொடங்கியதும், இசை கேட்க வருபவனின் காதுகளை அடைப்பதுபோல, எழில் மிகு சித்திரத் தைத் தயாரித்து காண வாரீர் என அனை வரையும் அழைத்து, காண வரும் சிலரின் கண்களைக் கட்டிவிடுவது போல, பழச்சாற் றின் இனிப்பைக் கூறிக்கொண்டு, பருகக் கொஞ்சம் தருக என்று கேட்பவனை விரட் டுவதுபோல, ஆலயங்களுக்குமகிமைரும், மேன்மையும், பலனளிக்கும் சக்தியும் இருப்பதைக் கூறிவிட்டு, அங்கு வரக் கூடாது—நுழையக் கூடாது என்று சிலரை அல்ல, ஏறக்குறைய எட்டுகோடி மக்களைத் தடுத்து வந்தார்கள்.

64. பொருளைக் காட்டி மறைப்பார் குழந்தைகளிடமிருந்து பெற்றோர். நாமோ புனித ஸ்தலங்களின்பெருமையைக்கூறிப்

பூட்டி விடுகிறோம், அங்கு ஒருகுறிப்பிட்ட சமூக மக்கள் வரக்கூடாது என்று.

65. மலர்மாலை மதயானை முன் வீசப் பட்டுக் காலில் மிதிக்கப்படுவது போல, நல்ல பேச்சுக்குப் பொல்லாத நிலை வருவதுண்டு முகர்ந்துரசித்து கூந்தலிற்செருகி இன்புற்றுமகிழும்மாதரிடம் மலர்சென்று பெருமையும் பயனும் பெறுவதுபோல, நல்லபேச்சு சுவையும் பயனும் கண்டறிந்து பெறக்கூடியவர்களிடம் போய்ச் சேர்வதும் உண்டு.

66. வெற்றி வீரன் மகாத்மாவுக்கு, வெறியன் தந்த பரிசு மூன்று குண்டுகள் —அடிமைகளின் விடுதலையைப்பெற்றுத் தந்த ஆபிரகாம் லிங்கன் மீது அங்கோர் வெறியன் குண்டு வீசியதுபோல!

67. தோட்டத்தை மண் மேடாக்கிய வனிடமிருந்து மீட்டு, அதைப் புன்னகைப்

பூந்தோட்ட மாக்குவதற்காக, அழகிய மலர்ச் செடிகளுக்கான விதைகளைத் தூவ அங்கு சென்றபோது புதருக்குள் ளிருந்து பாம்பொன்று வந்து கடித்துக் கொல்லு வதுபோல், நாட்டை மீட்டு, நல்லாட்சி அமைத்து மக்களை நல்லவர்களாக்குவ தற்காகக் கருத்தைப் பரப்பும்போது கோட்சே கிளம்பினான்.

68. ஒரு நாட்டின் வரலாற்றிலே அர சியல் நிர்ணய சபை கூடுவது எழுச்சிக் குரிய சம்பவம்...விடிதலைப் பெற்று விட் டோம் என்று மகிழ வேண்டிய நேரம்; மலடியோ என்று சந்தேகிக்கப்பட்ட தாய்க்குப் பிறந்த குழந்தை அம்மா என்று அழைக்கும்போது, அந்தத் தாய்க்கு உண் டாகும் களிப்புக்குச் சமமானது; ஒன்றரை நூற்றாண்டு அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றதற்கு அறிகுறியாக அர சியல் நிர்ணய சபை கூடுவது.

69. விழிகளில்லாக் குருடன் விலங்கொடித்தேன் என்று வீரம் பேசுகிறான், தன்மீது பூட்டப்பட்டுள்ள வேறு விலங்குகளை உணராமலேயே. கந்தசாமிக்கு கடுஞ் ஜுரம், ஜுரத்தின் காரணமாகக் கைகால் பிடிப்பு, கண்ணில் பஞ்சடைப்பு மார்பிலே வலி இவ்வளவும். ஜுரத்தைப் போக்க மருந்திடுகிறார் மருத்துவர், ஜுரம் குறைகிறது—மறைகிறது—முகம் மலருகிறது. ஜுரம் போய்விட்டது வைத்தியரே ஆனால் கைகால் பிடிப்பும் மார்பு வலியும் போகக்காணோம்; மேலும் ஏதோ ஒருவகை புதுவிதமான அலுப்பும் ஏற்பட்டிருக்கிறது என்று கந்தசாமி கூறுகிறான். ஆமப்பா கந்தசாமி இப்போது நான் நாலு நாட்கள் கொடுத்த சூரணம் ஜுரத்தைப் போக்க மட்டுந்தான், இனி தரப்போகும் மருந்தினால்தான் கைகால் பிடிப்பும், மார்பு வலியும், அலுப்பும் நீங்கும். இரத்த சுத்தி ஏற்படும் புதிய பலம் உண்டாகும்

என்று கூறுகிருர். நல்ல மருத்துவர் இதைக் கூறுவார். நல்லறிவுள்ள நோயாளி அதைப் போலவே நடப்பான். ஜுரம் என்பது உடலிலே முள்தைத்தது போல அல்ல, ஜுரநோயை மட்டும் நீக்கி விட. ஜுரம் என்பது கூட்டுச்சரக்கு. அடிமைத்தனமும் அது போன்றதே; அந்நிய ஆட்சி கடும் ஜுரம் போன்றது. அது நீங்கிவிட்டது, இப்போது.

70. கனியும் அழுகுவது காண்கிருேம் அந்த அழுகிய பழத்திலேபிறகுபுழுநெளியவும் காண்கிருேம். மதுரம்தரும் பழமாயிற்றே, மாங்கனியாயிற்றே, நமது தோட்டத்திலே கிடைத்ததாயிற்றே, இதிலே நெளிவது புழுவாக இருக்க முடியாது, பழத்திலே சுவை இருக்கும், புழு எப்படி இருக்க முடியும்? என்று யாராவது வாதாடுவார்களா? பழம் அழுகுவதுபோல;

மலர் கசங்கி மணத்தை இழந்து பிறகு கெட்ட வாடை கொள்ளுவது போல; தழை சருகு ஆவதுபோல; பலபல தத்துவங்களும் ஏற்பாடுகளும் காலச் சிறையிலே கிடந்து கிடந்து கெடுவதும், பல கேடுகளை உற்பத்தி செய்வதும் இயற்கையாக ஏற்படும் ஓர் நிகழ்ச்சி. இதனைஉணர மறுப்பது உயிரை அறியாதார் போக்கு.

71. கடை வீதிக்குச் செல்கிறோம், கையில் பணத்துடன். கடை வீதி போய்ச் சேருவதற்குள் கடை வீதியிலே உள்ள பண்டங்களே மாறிவிடக்கூடும், விலையும் வித்தியாசமாகி விடக் கூடும், அது மட்டுமல்ல, எடுத்துச் செல்லும் காசும் செல்லுபடியாகாத தாகிவிடலாம்; குறையக் கூடும், மறையக்கூடும். இதிலே எது எப்போது நேரிடும் என்று தெரிந்துகொள்ள

முடியாது என்றால், கடைவீதி செல்பவ னின் கருத்தும் காரியமும் என்ன ஆகும்? இந்நாட்டு மக்களில் பெரும்பான்மையின ருக்கு வாழ்க்கைச் சந்தை இது போலவே அமைந்து விடுகிறது.

72. பெருங்காயம் வாங்கும் செட்டி யார் கடையிலேயே கருவேப்பிலையும்கேட் டால் இல்லை யென்றுதான் சொல்லு வார். கொத்தவால் சாவடியின் உள் ளேசென்றுதான் கருவேப்பிலை வாங்க வேண்டும். அதைப்போலவே எல்லாவிச யங்களையும் ஒரு கட்சீயிலிருந்தே பெற்று விடமுடியாது.

73. பெருங்காயம்—கருவேப்பிலைமுத லியவைகளைக்கொண்டு சாம்பார் செய்ய முக்கியமாக பருப்பு வேண்டும். நாம் வாங்

கும் பருப்பு வேகிற பருப்பாக வாங்க வேண்டும். அதுவும்சிறிது வாங்கி சமைத்துப்பார்த்து நன்ருக வேகிறது என்று சொல்லிய பின்னர்தான் அதிகமாகவாங்க வேண்டும். வாழ்க்கையிலே சமையலுக்காக துவரம் பருப்பு வாங்கவும், பதார்த்தம் வாங்கவும் கலை தேவையா யிருக்கிறது. வாழ்க்கைச் சந்தையிலே நீங்கள் இன்னும் எவ்வளவு கலை வளம் பெற வேண்டு மென்பதை சிந்தனைச் செய்து பாருங்கள். வாழ்க்கைச் சந்தைக்கு வேண்டிய பல விஷயங்களையும் ஒரு கட்சியிலிருந்தே பெற்றுவிட முடியாது. ஒவ்வொரு கட்சியிலிருந்தும் சில கொள்கைகளை எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

74. காங்கிரஸ்கட்சி எதிர்க்கட்சியின் லேபிலைப் போட்டுக்கொண்டு காட்சி அளிக்க முடியாது. திராவிடக் கட்சி என்பதும் ஒரு லேபில்தான். ஆகவே லேபி

லைப் பார்த்து யாரும் ஏமாந்து விடக் கூடாது. 'சீசர்ஸ்' சிகரெட்டு பாக்கெட்டு களில் 'அக்பர்ஷா' சிகரெட்டுகளும், 'அக்பர்ஷா' சிகரெட்டுப்பாக்கெட்டுகளில் 'சிசர்ஸ்' சிகரெட்டுகளும் இருக்கும். ஆத லால் லேபிலைப் பார்ததுவிட்டு சரக்கை வாங்கிவிடக்கூடாது உள்ளே இருக்கும் பொருளைப் பார்த்துத தான் வாங்க வேண் டும்.

75. தன்னுடைய ஜட்கா வண்டியிலே பிரயாணம் செய்யவேண்டு மென்று விரும்பும் ஜட்கா வண்டிக்காரன் நாம் பஸ்ஸில் ஏறப்போவதைப் பார்த்து, இந்த பஸ்ஸிலா ஏறப்போகிறீர்கள்? அடிக்கடி சக்கரம் பன்சராய்ப் போய்விடுமே! சீக்கி ரம் போய் சேராதே! அந்தப் பஸ்ஸைநம்பி ஏருதீர்கள்! இதோ ஜட்காவண்டி! நொடிப் பொழுதில் போய்விடும் என்றுதான் சொல்லுவான். அதே ஜட்கா வண்டிக் காரன் அவசர அலுவலாக எங்கேயாகி லும் செல்லவேண்டி யிருந்தால், அவன்

சொன்ன அதே பஸ்ஸில்தான் பிரயாணம் செய்வான். அதைப்போலததான் புதிய புதிய மாறுதல்களும் நடக்கின்றன.

76. கிளி கொஞ்சிடும் சோலையிலே, நடுநிசி வேளையிலே ஆந்தை அலறுகிற தல்லவா? அதுவும் பாபம், தனது ஆலா பனத்தைக் கேட்டு உலகு உவகையுடன் இருப்பதாகவே எண்ணிக் கொள்கிறது! தன் குறும்பையும், கோணற் சேட்டை களையும் கண்டு, உலகு மகிழ்கிறது என் கிற மனப் பான்மை மந்திக்கே இருக்கும் போது, மக்களிலே சிலருக்குஇருப்பதிலே என்ன ஆச்சரியம்! மலர்ச் செடி அருகே புழு நெளிவதில்லையா! மயில் ஆடக் கண் டும், வான்கோழி கூச்சமின்றி ஆடவில் லையா? அது போலவே, உலகு அறி வொளிகண்டு, புதுப்பாதையை தேடிக் கொண்டு செல்லும் நிலை கண்டும் சில கபந்தங்கள் தமது போக்கிலேயே பிரேமை கொண்டுள்ளன.

77. திருட்டுத்தனமாகக் கனிதேடி மரம் ஏறியவனுடைய நினைப்பு எப்படி யிருக்கும்? எந்த அளவுக்கு அதன் நிலை உயர்ந்திருக்கிறதோ அந்த அளவுக்கு அவன் நினைப்புதாழ்ந்திருக்கும். முதலில் கனிபறித்து, பிறகு அவசர அவசரமாகத் தோட்டத்துக்குச் சொந்தக்காரன் வந்துவிடுவானோ, வந்து விட்டால் என்ன செய்வானோ என்ற பயத்தில் செங்காய்களைப் பறித்து, அதன் பின் காய்களையும் பறிப்பான். கனிபறிக்கையில் அவனது பாரத்தால் மரம் குலுங்கும் பொழுதெல்லாம் அவன்மனம்பயத்தால் குலுங்கும். அடிக்கடி தோட்டத்துச் சொந்தக்காரன் வந்தால் எப்படிக்குதித்து எங்கு ஓடுவது என்று நினைப்பான். அவன் இருப்பதுமரத்தின் உச்சியில்ஆனால் அவன்மனம் இருப்பது தரையில்.

இங்கும் நிலைக்கேற்ற நினைப்பில்லை. காரணம், எப்படிமூன்ருவது அடுக்குமாடியில் உலவும் தொழிலாளிக்கு அந்த மாடி வீடு சொந்தமில்லையோ, அதுபோல மர உச்சியில் கனி பறிப்பவனுக்கு அந்த மரம் சொந்தமில்லை.

78 சென்னை; நட்டப்பகல் 12 மணி நேரம்; தார்ரோடு இளகியிருக்கிறது; ஒருவன் நடந்து செல்கிருன். மற்ருெருவன் பக்கத்தில் போட்டாப டி வேட்டிக் கட்டிக் கொண்டு மெருகு கலையாத காரில் செல்லுகிருன். காரைப்பார்த்த நடந்து செல்லுகிறவன் என்ன நினைப்பான்? நாம் தான்தினம் விதண்டாவாதக்காரர்கள். வேத வேதாந்திகள். உத்தமோத்தர்கள் என்ன எண்ணுவார்கள்? 'நாம் நடந்து செல்லுகிருேம், அவன் பறந்து செல்லுகிருன். நான் ஒதுங்கி நிற்கிறேன் அவன் என்னை உராய்ந்து கொண்டு

காரில் செல்லுகிருன். அவனும் மனிதன் நானும் மனிதன். அனைவரும் ஆண்டவ னின் புதல்வர்கள். அவன் பிறந்த வேளை காரில் செல்லுகிருன்—நான் பிறந்த வேளை நடந்து செல்லுகிறேன்' என்று எண்ணுவார்களா? ஏன் எண்ண வேண் டும்? நடந்து செல்கிறவன் எண்ணமாட் டானு "ஏ ஆண்டவனே! இருவரும் உனது புதல்வர்கள்தான். இருந்தும் வெயிலின் வேகத்தைத் தோற்கடிக்க அவனுக்கு கார். சிரமப்படாமல் செல்வ தற்குச் செல்வம். நான் நடந்து செல்கி றேன்! எனக்குக் காலுக்குச் செருப்புக் கூட வாங்கமுடியாத படி தரித்திரம். இது ஏன்?'' இது மாத்திரம் எண்ணியிருக்க மாட்டான்; மேலும் தொடர்ந்து எண்ணி யிருப்பான்.

79. பாங்கிலே ஒரு ஆயிர ரூபாய் வீணுக முடங்கி கிடப்பதை விட, அதே

பணத்தைக் கொண்டு ஒரு 5000-ரூ பாய்க்கு சரக்கு எடுத்து அதனுல் லாபம் சம்பாதிக்கத்தான் வியாபாரிகளாகிய நீங்கள் எண்ணுவீர்கள். அப்பொழுது தான் பணம் முடக்கமின்றி பொருளாதாரம் பெருகும். அதேபோல் நம் நாட்டில் பல கோயில்களிலே லட்சக்கணக்கான ரூபாய்கள், நகைகளாகவும், நிலங்களாகவும், வாகனங்களாகவும் மக்களுக்கு ஒரு சிறிதும் பிரயோசன மில்லாமல் முடங்கிக் கிடப்பதை எடுத்து, பல ஆலைகளையும், தொழிற் சாலைகளையும் ஏற்படுத்தலாமே!

80. ஞானசாகரம், தங்கள் மனம் என்று எண்ணிக்கொண்டு, பேசிப் பார்க்கின்றன—மதிப்போர் இல்லை —தங்கள் எதிர்ப்பு கண்டு சீர்திருத்தப் படை சிதறுண்டு போகும் என்று எண்ணிக்கொண்டு, தூற்றல் பாணத்தைத் துரிதமாகத் தொடுத்துப் பார்க்கின்றன. பலன்

இல்லை. மாடாகப்போ! மரமாகப்போ! கல்லாகு! கண்ணிழந்துபோ! என்று சாபம் கொடுக்கக் கூடிய காலமல்ல இது. எனவே சாபம் கொடுப்பதற்குப் பதிலாக, மாடே, மரமே, கல்லே, கபோதி! என்று பலப் பல வசமொழிகளை வீசிப் பார்க்கின்றன. சீர்திருத்தம் கோருவோர் மீது வசைமாரி கண்டு, சீர்திருத்தவாதிகள் வருத்தப்படப் போவதில்லை.

81. நமது பிள்ளைகளிடம், 'நான் நான்கு மாம்பழங்கள் வைத்திருந்தேன்' அதை இரண்டு பேருக்குக் கொடுத்தால் ஆளுக்கு எத்தனை மாம்பழம்?' என்று கணக்குப் போடுவோம், பிள்ளைகளோ ஆளுக்கு மாம்பழம் எத்தனை என்று யோசிப்பதைவிட மாம்பழத்தின் ருசி எப்படியிருக்கும் என்று யோசிப்பதில் நினைப்பை அதிகமாக செலுத்துவார்கள். ஆனால்

இப்படி யல்ல ஜெர்மனியில் பிள்ளைகளுக்குக் கணக்குப் போடுவது. 4 டாங்கிகள் தான் நம்மிடம் இருக்கின்றன. எதிரியிடம் 8 டாங்கிகள் இருக்கின்றன. எப்படி இந்த 4 டாங்கிகளை கொண்டு எதிரியைத் தோற்கடிப்பது என்ற முறையில் கேள்வி இருக்கும். இன்னும் நிமிடத்திற்கு அறுபது மைல் வேகத்தில் செல்லும் விமானம், காலை 7 மணிக்கு இங்கிருந்து கிளம்பி லண்டனில் குறித்த இடத்தில் குண்டு வீசிவிட்டு வரவேண்டுமானால், எத்தனை மணி பிடிக்கும் என்று கேள்வி இருக்கும்.

82. திருத்தணி, திருப்பதி, திருவாரூர், சிதம்பரம் போன்ற திவ்ய க்ஷேத்திரங்களையும், ஆங்காங்கு நடக்கிற விழாக்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளக்காட்டுகிற அளவுக்கு ஆசையை, ரேடியோவின் மூலம் லண்டன் கல்கத்தா இரங்

கூன் ஆகியவை பற்றித் தெரிந்து கொள் வதில் காட்ட மாட்டார்கள்.

83. மாலை நேரத்தில் ஆகாயத்தில் விமானம் பறக்கிறது என்று வைத்துக் கொள்வோம். சாலை ஓரத்திலுள்ள பெரிய வர் அண்ணாந்து பார்ப்பார். கண்ணில் ஒருவித மிரட்சி தோன்றும். இம்மாறுத லுடன் அவர் நினைப்புக்கும் ஆகாயவிமா னத்திற்குமுள்ள தொடர்பு அறுந்துவிடும். அவர் உடனே விமானத்திற்குப் பக்கத் தில் பறக்கும் கருடனைப் பார்ப்பார். பார்ப் பதற்குக் கொடுத்து வைத்தோமே என்று சந்தோஷப்படுவார். அத்துடன் நிற்கமாட் டார். தன் பக்கத்திலுள்ள சிறுவனையும் கருடனைப் பார்க்கச சொல்லி கன்னத்தில் போட்டுக்கொள்ளச் சொல்வார். விமானத் தையும் பார்க்கிறார்; கருடனையும் பார்க்

கிருர்; கருடனிடம் கவனம் செலுத்துகிற அளவுககு விமானததினிடம் காட்டமாட்டார்.

84 மலர்கொண்டு மாலேதொடுத்தலிலே கைத்திறன் இருக்கத்தான் செய்கிறது ஆனல் கைத்திறன் முழுவதும் காட்டி காகிதப் பூமாலே தொடுத்தால் பயன் என்ன? மாலேக்கு முதற்பொருள் மணமுள்ள மலர். அதுபோல பேச்சுக்கு முதற்பொருள் சுவையும் பயனும் உள்ள கருத்துக்கள்.

85. மாற்ருன் வீட்டுத தோட்டததிலே பூததிடும் மல்லிகைக்கு மணம் உண்டல்லவா? ரசிக்கததானே செய்வோம். அது போலவே, பேசுபவரின் கருத்து பயன் தருமாயின் கேட்பவரின் கூட்டுறவு எத்தன்மையதாக இருப்பினும், அவர்கள் ஏற்

றுக கொள்வர். எனவே, மேடை பேசசுக குக் கருத்துக்களைச் சேகரிப்பது, சிந்தனை யில் விளையும்படிச் செய்வது மிகமிக முக் கியம். பூத்த மலரை அழகுறத் தொடுத் தல் போல, கிடைத்த கருத்தை தொகுத் தும் வகுத்தும் பிரிந்தும் வெல்லும் சொல் தெளிவானநடை, நம்பிக்கை யூட்டும் போக்கு இவைகளைக் கொண்டு பேச்சு அமைதல் வேண்டும்.

86. 'தீயினால் சுட்ட புண் ஆறும்— நாவினால் சுட்ட புண் ஆருது' என்ற வள் ளுவர் வாக்கு, தனிப்பட்ட உரையாட லுக்கு மிகப் பொருந்தமாக இருக்கும். பேச்சு மேடையிலே ஆறிய புண் அதிகம். நாவினால் சுட்டவடு பெற்றதாக எண்ணி கல்வீசினோர், நல்வழி கண்டோம் அவர் உரையால் என்று பிரிதோர் நாள் உணர் ந்து கல் தூக்கிய கரத்தால் கனத்த மாலை

யைத் தூக்கி வரும் காட்சிகள் நிரம்பிய விசித்திரபுரி, மேடை. எனவே, பேசும் பொருள் பயன்படத்தககதாகவும், வீணை வீம்புக்கு வித்திடாத வகையிலும் அமைத்துக் கொள்வது நல்லது. இனித்தே ஆக வேண்டும் என்று முயன்ருல், சதங்கையும் ஜாலரும் தேடித் தீரவேண்டி வரும்.

87 இயற்கை எழில் நிரம்பிய இடங்கள் எவ்வளவோ உள்ளன, கவனிப்பாரற்று. மேஞட்டவர் கண்டால் இங்குஇவ்வளவு 'ஓயவிடங்களை' உண்டாக்கி, இயற்கை அழகை பருகுவதற்கும், பயன்படுத்திக்கொள்வர். இங்கோ அவை அவ்வளவும், அழகுஇருந்தும், ஆர்வம் தரும் சக்தி இருந்தும், கலை உள்ளத்தைத் தரும் திறம் இருந்தும், கவனிப்பாரற்று—பருவமும் அழகும் இருந்தும், மணுளன் இல்லாத காரணத்தால் மங்கிய நிலவென

உள்ள, நம் நாட்டு விதவை போலவே ...உள்ளன. மறுமணம் செய்து கொள்ளவும் அவர்கள் தயார்!—நீங்கள் நேரமில்லையே' படகில்செல்ல, காட்டுப்பாதையில் நடக்க, காறுற்றங்கரையிலே உலவ நேரம் ஏது!

**88.** பேச்சு, கருத்தின் தொகுப்பு, கருத்து, சிந்தனையின் விளைவு. சிந்தனை, காண்பன கேட்பனவற்றிலே தொடர்ந்து ஏற்படும் ஆர்வம். ஒரே பொருள், காண்போருக்குவெவ்வேறு சிந்தனையைக்கிளறி வெவ்வேறு கருத்தை தூண்டி, அதற்கேற்ற முறையிலே பேச்சுபிறக்கச் செய்யும். வேப்பிலை வைத்தியர்—பூசாரி என்னும் இருவருக்கும் வேறுன எண்ணம் தருவது போல.

**89.** கண் இருந்தும் குழியில் வி... வேகமாகச் செல்பவனைக் கண்டால், கை

கொட்டிச் சிரிக்க மாட்டோமா? கனி இருக்கக் காயைத் தேடித் திரிபவனைக் கண்டு, கேலி பேசாதிருப்போமா? வெண்ணெயை ஒருவன் பறித்துக் கொண்டு போக இடங்கொடுத்து விட்டு, நெய்தரும்படி வேறோர் இடத்திலே நின்று கெஞ்சுபவனைக் கண்டால் சிரிப்பு வராமலிருக்குமா? ரஷ்யா சிரிப்பது இம் முறையிலே தான். மனிதனை மனிதன் நாகரிகத்தின் பேரால் சுரண்டுவதையும், சுரண்டப் படுபவன் சூட்சமத்தைத் தெரிந்துகொள்ளாமலிருப்பதையும் கண்டு, ரஷ்யாசிரிக்கிறது. ஏனெனில், அங்கு சுரண்டல் தொழில் ஒழிந்து விட்டது.

90. அதோ ஓர் கூட்டம். ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்பு பற்றி பிரசங்க பூஷணம் பேச்சானந்தர் சரமாரியாகப் பேசுகிறார், பேசட்டும்,

'காண்பதெல்லாம் மாயை, பூண்பதெல் லாம் மாயையேகாண்' பாடுகிறார், கல் யாணி ஆலாபனம். கைவிரலிலே கவனி யுங்கள் பளுஜாகர் வைரம், பக்கத்திலே வெள்ளிச் செம்பு, கற்கண்டு பொடிபோட் டுக் காய்ச்சிய பசும் பால் உள்ளே. பேசும் பொருள் கவன மிருக்கிறதோ? மாயா வாதம்.

91. வாலிபர்கள் உரிமைப் போர்ப படையின் ஈட்டி முனைகள் அவர்தம்உள் ளத்தில் புரட்சிப் புயலிருக்கும். வாழ்க்கை என்னும் பொய்கையிலே விசாரம் என் னும் நஞ்சு கலக்கப் படாத பருவம். பகுத் தறிவு என்னும் பகலவன் எரியப்பட்டு, விஷப்பூச்சிகள் போன்ற சுயநலக் கருத்துக்கள் அழிக்கப்பட்டிருக்கும். தூய் மையான அந்த வாலிப உள்ளங்களில், சந்தனக் காட்டைக் கடந்து மணமும், குளிர்ச்சியும் மருகி மக்களை மகிழ்விக்க

வருகிறதே தென்றல் அது போன்றது வாலிபம்.

92. மாயாவாதமும் மனமருட்சியும் வாலிபர்களிடம் நெருங்க நடுங்கும். வெட்டிப் பேச்சைத் தட்டி நடக்கும் தீரம், வீணரின் கொட்டத்தை அடக்கியாக வேண்டுமென்ற வீரம், ஆபத்துக்களைப் பொருட்படுத்தாமல் அநீதியைக்கண்டால் கொதித்தெழுந்து தாக்கும் பண்பு, வாலிபர்களிடையே மிகுந்திருக்கும். சும்மாயிருப்பதா?! நாம் என்ன சொரணையற்றவர்களோ புறப்படு போரிடு, அநீதி ஒழியுமட்டும். அல்லது நாம் ஒழியும்வரை போர், இந்தப் பேச்சுத்தான் வாலிபர் செவியேறும்.

93. வாலிபர்கள் நடமாடும் எஃகுக் கம்பிகள், அகத்திலே அருவிபோல் ஆர்வம், முகத்திலே வீரக்களை. செயலிலே துடிதுடிப்பு காணப்படும். தலை குனிந்து நிற்பது, பெருமூச்செறிவது, நம்மால் ஆகிற

காரியமா? என்று இழுத்துப் பேசுவது, ஆகிய முறைகள் அவர்களுக்கு பிடிக்கா தன. அவர்கள் செயலாற்றும் வீரர்கள்.

94. கோபமாக இருக்குபோது, குப்பன் கூறுகிறான், அவனவன் ஜாதி அவனவனுக்கு உயர்வு தானய்யா என்று. அவனே பிறகு குளிர்ந்த மனதுடன் இருக்குப் போது 'என்ன இருந்தாலும் அவர் மேல் சாதிக்காரர்' என்று பேசுகிறான். குளிர்ந்த மனதுடனே இருக்கும்போது மேல் ஜாதிக்காரன் கூறுகிறான், 'குப்பா! ஜாதியிலே என்னடா இருக்கிறது? எல்லாம் அவாள் அவாள் குணத்தைப் பொறுதது இருக்கிறது' என்று ஆனால் கோபம் பிறந்தாலோ அவர் சொக்கரிக்கிறார், குதிரையும் கழுதையும் ஒன்றாகுமோ கையிலே உள்ள ஐந்து விரலும் ஒரே அளவோ' என்றெல்லாம். இது போலத்தான் இந்த சிறந்த இலட்சியத்தைப் பற்றி மக்கள் பேசுவதைக் கூர்ந்து கவனித்தால், ஊஞ்சல் ஆடுவது

போல, சறுக்கு மரம் ஏறுவது போல சம தர்மப் பேச்சு காணபபடும். சட்டம் ஜாதி யைக் கவனித்துத தடைபோடாது.

95. இதிலா, அதிலா, எதில் கிடைக் கும், கருதாத களிப்பு என்று ஆராய்கி ருன் அறிவுடைய மனிதன் சித்தாந்தத் திலே, வேதாந்தத்திலே, மோனத்திலே, பரமன் பற்றிய ஞானத்திலே, கலேயிலே எதிலெல்லாம் கிடைக்கும் ‘வாழ்வின் சுவை’ என்று தேடியவண்ணம் இருக்கி ருன் தெளிவுள்ள மனிதன் அஃதற்ற வன் ஆமையாகிருன்.

96. குண்டலம் அணிந்த குருமார்களே யும் குருந்தடி பிடித்துஉலவிய உத்தமரை யும் ஏக காலத்தில் கண்டபோது, கண்ட றியாதன கண்டோம் என்று களித்தனர். காதகனுக்கு கண்ணிலேயும் கருத்திலே யும் கருவிஷம்—அவன் காணச் சகிக்க வில்லே இந்தக் காட்சியை—கொன்ருன் உத்தமரை—அருளொழுகும் கண்ணுடை

யவர் என்று மக்கள் கூறக்கேட்கும், ஏசுவைச் சிலுவையில் அறைந்த வஞ்சகர் போல.

97. கல்லும் கட்டையும் காகிதக் குப்பையும் ஏற்றிக் கொண்டு சென்ற கலம் கவிழ்ந்தால் நஷ்டம் என்ன? முத்தும் பவளமும், முழுமதி போன்ற துகிலும் பிறவும் நெஞ்சை வென்றிடச் செய்யுமல்லவா அதுபோல, காந்தியாரைக் கயவன் கொன்ற போது, அவருடைய மனதிலே அருமையான திட்டங்கள், நாட்டுக்கு நலன் தரும் புதிய முறைகள் ஊசலாடிக் கொண்டிருந்தன. அதை எண்ணும்போது தான் எவ்வளவு பெரிய நஷ்டம் இந்தச் சம்பவம் என்பது விளங்குகிறது.

98. சாதாரண காய்ச்சலுக்கு ஒரு வைத்தியரின் மருந்து பயனற்றுப் போய், வேறொரு வைத்தியர் கொடுத்த மருந்து வேலை செய்து ஜுரம் நீங்கி விட்டால்,

என்ன சொல்லுகிறோம்! முன்னவரின் முறை சரியில்லை, மருந்து பயனில்லை என்று கூறிவிடுகிறோமே. இதோ ஒரு நாட்டின் நலிவை, மக்களின் நிலையை மாற்ற நமக்குத் தலைமுறை தலைமுறையாக இருந்து வந்தவர்களால முடியாமற் போனபிறகு, அவர்களைப்போல், 'நான் அற்புதம் புரிபவன்' என்று கூறிக்கொள்ளாமல் பணிபுரிந்து வெற்றிகண்டு கடைசியில் வகுப்பு மாச்சரியம் ஒழிந்து புது வாழ்வு ஏற்படவேண்டும் என்பதற்காக, உயிரையே கொடுத்தாரே ஓர் உத்தமர். அவரைப் போற்றும் அதே வாயினால், எப்படி அந்தப் பழைய சக்திகளின் பிரதிநிதிகளைப் புகழ்வது?

99. அரபி நாட்டுக் கலையிலே, தென்றலைப்பற்றிய கவிதைகள் அதிக மிருக்க முடியாது எஸ்கிமோ நாட்டுக் கலையிலே கதிரோனின் ஒளி பற்றிய கவிதைகள் அதிக மிராது. ஆப்பிரிக்கா நாட்டு ஜுலு வகுப்பினரின் கலையிலே அவர்களின்

நாட்டியம் கவியிலே இருக்கும். அது போலவே ஆரியக் கலையிலே கங்கை யின் கவர்ச்சியும், கரை யோரக் காட்சி யும், சோலை மாட்சியும் என்பன போன்ற வைகள் கவிதைகளாக, இலக்கியமாக இருக்கும்.

100. சன்யாட்சன் காலத்திலே சீன மக்கள் பலப்பலதெய்வ வணக்கம் செய்து கிடந்தனர். சன்யாட்சன், அந்நாட்டு படித் தோரை அழைத்து, கடவுளின்பட்டியைக் காட்டி கேட்டாராம் மக்களுக்கு ஒரு முழு முதற் கடவுள் இருந்தால் போதுமல்லவா என்று. ஆம் என்றனர் அறிஞர். அப்படி யானல் இந்தப் பெயர்வரிசையிலே ஒன்று வைத்துக்கொண்டு மற்றவற்றைச் சிகப்பு கோடிட்டு விடுக என்று செப்பினராம். ஒன்றே தேவன் என்றனர் மக்கள் பிறகு. இங்கோ நமது சைவசமயத் தலைவர்கள், ஐம்பதாண்டுகளுக்கு மேலாக சிறுதெய்வ வணக்கம் கூடாது. எமது சிவமொன்றே

முழுமுதற் கடவுள் என்று கூறினர். பலன் என்ன? இன்றுவரை பெரிய பாளையத்தம்மனுக்கு வேபபஞ்சேலை கட்டும் வழக்கத்தைக்கூட ஒழித்தபாடில்லை.

101. கிரேக்க ரோமானியர்கள் இதிகாச காலக கடவுள்களாகக் கொண்டிருந்த வீனஸ் அபாலோ முதலியவற்றை ஏசுவிடம் விசுவாசம் வைத்ததும்விட்டொழித்தனர். பிரிட்டனிலே கிருஸ்துவ மார்க்கம் பரவியதும் பழங்காலத்திலே வணங்கிய தார், ஓடின் எனும் தெய்வங்களை மறந்தனர். இங்கோ, அன்று தொட்டு இன்றுவரை, ஆரிய கற்பனையான சீறு தெய்வங்களிலே ஒன்றை நீககவும் மக்கள் தயாரில்லை.

102. வெள்ளைக்காரன் எவ்வளவு விவேகததுடன் உணர்ந்து கொண்டான், இனி நமது ஏகாதிபத்தியச் சரக்கு விற்பனையாகாது, என்பதை. எவ்வளவு புத்திசாலித்தனமாகக் கடையைக் கட்டிஏ

கொண்டான். ஏன் அந்த விவேகம் பார்ப் பனச் சமுதாயத்தவர்களுக்கு இல்லை?

103. நோக்கமும், நடைமுறையும் ஒன்ருக இருந்தால்தான் உயர்வு. எங்கள் சொந்தத் தறியில் தயாரித்தது—சாயத் துக்கு உத்தரவாதம், என்று ஜவுளிக் கடைக்காரர் தமது தொழிலுக்குச் சிறப் புரை கூறி, விற்பனையை அதிகப்படுத்து வத போலவேதான் எங்கள் பத்திரிகைக்கு விசேஷ பிரத்யேக நிருபர்கள் உண்டு. பாரிஸ் மாநாட்டுக்குத் தனி நிருபரை அனுப்புகிருேம் செய்திகள் பூரணமாக வருவது எங்கள் பத்திரிகையில்தான், என்று சிறப்புரை கூறி பத்திரிகையைப் பரப்புகிருர் அந்த வியாபாரி.

104. அதிகச் சிரமமில்லாமலே கூட முதல் போடுகிருன் ஆலை அரசன், தொழி லாளியின் திறமையினுலும், சிரமத்தினு

லும் ஆடையின் தரம் உயருகிறது. மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள். ஏராள மாக நாட்டிலே பரவுகிறது. இலாபம்குவி கிறது ஆலை அரசர்களுக்கு! அதுபோல வேசெய்திகளைத் திரட்டுவதில் நிபுணர் களை அவரவர் திறமைக்குத் தக்கபடிஎழு தவைத்து இலாபம் திரட்டுகிறார் பத்திரி கைத் தொழில் அதிபர்.

105. கந்தன் சேட்டாரும், காலரூபா யாவது அதிகம் தேவை, கூலியைக் கொஞ்சம் உயர்த்துங்கள் என்று. முடி யாது என்று, சொல்லிவிட்டாராம். முத் தன் பேசச் சென்றதும், முகத்தைக் கடு கடுப்பாக வைத்துக்கொண்டு, எதுவும் முடியாது போ, என்று சொன்னாராம். முனியன், உள்ளே நுழைந்தபோது, அவன் மீது நாயை ஏவினார்களாம்-என்று உரை யாடல் வளர்ந்து, கடைசியில் கந்தனும்

முனியனும், முத்தனும் காத்தானும், இப்படி நாம் தனித்தனியே, நமது குறைகளை எடுத்துக்கூறிப் பரிகாரம் தேடிப் பயனில்லை; நாமெல்லாம். சேர்ந்து செல்வோம். அதுதான் சரியானவழி என்று முடிவு செய்தனர். ஸ்தாபனங்கள் தோன்றின.

106. வலிவுள்ள இரும்புகர்டர்களும் வகை வகையான மரச்சாமான்களும், உயர்தரமான சிமிட்டியும், அழகான பித்தளை குமிழ்களும், அரைத்தெடுத்த சுண்ணாம்புக் குழையலும் தேவை. ஆனால் இவைகளை எங்கெங்கு எந்தெந்த அளவில் எந்தெந்த முறையில் உபயோகித்தால், கட்டடத்தின் கட்டுக்கோப்பு சிறந்த முறையிலும், உறுதியும் பயனும் நிறைந்த வகையிலும் இருக்கும் என்பதை அறிந்து அமைக்கும் அமைப்பாளர்கள் தேவை. அவர்களால் தான் ஸ்தா

பனங்கள் நல்ல முறையிலே அமையும். அமைந்த பிறகும் கட்டுக்கோப்பு கெடாத படி பார்த்துக்கொள்ளும் திறம் இருக்க வேண்டும்—அக்கரையும் இருக்க வேண்டும்.

107. மான் குற்றம் செய்யாமலா புலியார் தண்டித்தார்? ஏன் மான் அழகான கண்களைக் காட்டிற்று? புள்ளி மான் துள்ளி விளையாடுவதா? கள்ளம் கபடமற்று ஓடுவதா? சருகு உதிரும் சத்தம் கேட்டாலும் மருண்டு ஓடுவது ஒருகுற்றமல்லவா? சாதுவாக இருப்பது மற்ரேர் குற்றம்! பதுங்கிப் பாய்வது, பல்லால்கடிப்பது நகத்தால் கிழிப்பது, இரத்தம் குடிப்பது, உறுமுவது போன்ற ஒரு நற்பண்பும் இல்லை! இவைகளைப் பெறுதிருத்தல் குற்றமல்லவா? புலியார் எத்தனை குற்றங்களைத் தான் பொறுப்பார்? ஆகவேதான் குற்றம் செய்த மானைத் தண்டித்தார்! டிரைபஸ் செய்தகுற்றம் இவ்விதமானதே!

இதனை இறுமாப்பாளருக்கு இடித்துக் கூற ஒருவர் தான் முன் வந்தார்; ஒரு பலனும் கருதாது முன் வந்தார். தன் தலை போகுமே எனற பயமின்றி முன்வந்தார்... அவர்தான் ஏழைபங்காளர் எமிலி ஜோலா

108. மலையுச்சியி லிருந்து விரைந்து வரும் பேராறுகள் போல, கட்டுரைகள் ஜோலாவின் பேனு முனையி லிருந்து கிளம்பின.

109. கற்பனையில் சனிதருகிற கற்பகத் தருவைவிட, குப்பை மேட்டில் சேர்ந்திருக்கிற முட்செடி ஜோலாவுக்கு மேலானதாயிருந்தது. அவருடைய நாவல்களில் நிலையற்றோர், வஞ்சகர்கள், அனுதைகள் ஆணவக்காரர், திருடர், சோம்பேறிகள் குடிகாரர், கனவு காண்போர், நலிந்த உழவர், ஒடுக்கப்பட்ட உழைப்பாளர், கொடிய

முதலாளிகள், பேராசைப் பாதிரிமார், முது கெலும்பற்ற கலைவாணர், வெறி கொண்ட மதபித்தர், அனைவரும் சித்தரிக்கப் பட்டனர்.

110. நோய் இதுவென அறிந்து, அதற்கான மருந்து வகையும் தெரிந்து மருந்து செய்யும் முறையும் அறிந்து, தக்க மூலிகையைத் தேடி மருந்தாக்கித் தரும் கையாளும் இருந்து, இவ்வளவு இருந்தும் நோய்க்குறியைப் பற்றி வேண்டுமென்றே தவறான விளக்கம் கூறி, தேவையற்ற மருந்தை முறையற்ற வகையிலே பயிற்சியற்ற சையாளைக் கொண்டு தயாரித்துக் கொடுக்கச செய்தால், அந்த மருத்துவனை என்னவென்று கூறுவது? அதுபோல, பூகோள, சரிதச் சான்றுகள், மக்கள் மனப்பண்பு, நூலறிவு எனும் இவ்வளவும், பாகிஸ்தான் மறுக்க முடியாதது,

கிடைத்தே தீரும் என்பதை விளக்கி இருக்க, அதை விளக்கிக்கொண்டு, மக்களைத் தவருன கருத்துலகுக்கு அழைத்துச்சென்ற மாபெரும் பாதகத்தைச் செய்தனர் அந்த மக்கள். செய்தனர் என்று மட்டும் சொல்வதற்கில்லையே! இன்றும் செய்து கொண்டே வருகின்றனர்.

111. மீண்டும் மீண்டும் சாரணம் காட்டிக கொண்டிருக்கப் போவதில்லை—கருத்திழந்தவனுக்கு நல்லுரையும், கண்ணிழந்தவனுக்குக் காட்சியும், செவி மந்தமடைந்தவனுக்குக் கீதமும் பயனில்லை. யாரும் இல்லை தட்டிக் கேட்க என்ற செருக்குடன் இருக்கும் இந்த மந்திரி சபையினருக்கு, விவேகம் வேம்பு. எதிரி யார்? நண்பன் யார்? என்று விளக்கம் தெரியமுடியாத அளவுக்கு அதிகாரம் தலைக் கேறிவிட்டிருக்கிறது. இனி, அவர்

களால் ஆனதைச செய்து பார்க்கட்டும் என்று அறிவிப்பதைத் தவிர, வேறு ஏதும் சொல்லப் போவதில்லை.

112. அரைக்க அரைக்க சந்தனம் மணப்பதுபோல; உங்கள் அடக்கு முறை அதிகரிக்க அதிகரிக்க, திராவிட இயக்கத்தின் சக்தியைக் காணப் போகிறீர்கள்.

113. மதமென்னும் முள்ளில், கலையெனும் ஊன் அமைக்கப்பட்டிருப்பதறியாது உணவெனக் கருதி சுவைத்திடச் சென்று அவ்வழி—ஆரியத் தூண்டிலிற் சிக்கி, வாழ்வினைப் பறி கொடுக்கின்றனர் தமிழர்.

114. நாம் ஓர் தனியான நோக்கம் கொண்ட படையினர்! பாதை, மிக மிகக் கடினமானது. மிரட்டுபவர்களைவிட மயக்குபவர்கள் அதிகம். அந்தப் பாதையில் படுகுழிகளின் மீது பச்சிலை போட்டு

மூடப்பட்டிருக்கும்! சொட்டும் வண்டுகள் மட்டுமல்ல, கூவும் குயில்களும் இருக்கும்! வண்டை விரட்டி விட்டால் மட்டும்போதாது. கடமையை மறந்துவிடாமல் இருக்க வேண்டும். இது ம ட்டுமல்ல, கிளி நிறத்தில் ழுகுகள் காணப்படும்—உருவையும் நிறததையும் கண்டு மட்டும், குணத்தை நிர்ணயிக்க முடியாது. இப்படிப்பட்ட பாதையிலே செல்லு விடுதலே போர்வீரர்களாகிய நாம், ஓர் இலட்சியப் பூமியைநாடிச் செல்கிரேம்.

115. உடனடியான அரசியல் இலாபத்தை விரும்புபவர்கள் வெட்டுக்கிளிகள் போல், இங்கு மங்கும் தாவுவர்—மரம் பழுததால் வௌவாலாவர், புயலடிக்குமென்று தெரிந்தால், சந்து பொந்துக்களைத் தேடிக் கொள்வர்-கஷ்ட நஷ்டம் வருமெனத் தெரிந்தால், காவடி தூக்குவர், உடனுக் குடனே கணக்கப் பார்த்துக் களிப்படைவர்.

116. விஞ்ஞானி, தொலைவி லிருப்ப தைக் காண ஓர் கருவி கண்டு பிடிக்கி ருன்; ஆனல், அந்தக் கருவியுடன் திருப்திப் படுவதில்லை. அவன் உதவி யால், கிரஹங்களைக் காண முடிகிறது; களிப்பு வருகிறது, ஆனல் அந்தக் களிப் பும்போது மென்று அவன் இருப்பதில்லை. அந்தக் கிரஹங்களைப் பற்றிய சகலமும் தெரிய வேண்டு மென்று ஆசைப் படுகி ருன். தெரிந்தான பிறகு, அந்த அறிவை எப்படிப் பயன் படுத்துவது என்று மேலும் சிந்திக்கிருன்—ஒரு வெற்றி வேறு வே லைக்கு வாயிற்படி யாகிறது. அவனுடைய பணி, வளர்ந்தபடி இருக்கும்—இடையே நின்று விடாது. நாம் அமைத்துக் கொண் டுள்ள பணி, அது போன்றது. மந்திரி சபையிலே மாற்றங்கள், உத்யோகமன்றங் களிலே மாற்றங்கள் ஏற்படுவதால் மட் டும் நமது மனம் திருப்தி அடைந்து விடுவதில்லை. இவைகளின் காரணமாக

நாட்டுக்குப் புதிய நிலை என்ற நமது குறிக் கோள் ஈடேற என்னென்ன வழிவகைக் கிடைத்தது என்பதுதான் நமது சிந்தனை யாகிறது.

117. பாதையிலே செல்லும்போது, பச் சைக் கொடி ஒன்று பாதத்தைச் சுற்றிக் கொண்டால், அதை எடுத்தெறிந்து விட்டுச் செல்பவனுக்கு, பச்சைக் கொடியினிடமா பகை! அவனுடைய வேலை பச்சைக் கொடியை அறுத்து எறிவதா—அல்ல— அவன் மேற்கொண்டுள்ள பெரும் பணிக் காக, அவன் செல்கையில், பாதையிலே இந்தக் கொடி படர்ந்திருப்பதுடன், பாதத் தையும் பற்றிக்கொள்வதால், அந்தக் கொடியை எடுத்தெறிய நேரிடுகிறது. அவரைக் கொடியிடம் விரோதம் சுரைக்கொடியிடம் பாசம் என்று பொருள். அது போலவே, நாம் மனப் பூர்வமாக நம்புகிற, குறிக்கோளைப் பெற நடாத்தும் விடுதலைப் போர்ப் பாதை யிலே, இந்த மந்திரி சபை குறுக்கிட்

டுத் தடுப்பதால்தான், இதைக் கண்டிக்க வும் எதிர்க்கவும் நேரிடுகிறது—விரோத மல்ல, வஞ்சக மல்ல, பதவிப்பித்தல்ல.

118. குருடர் பலர் யானையைக் கண்டனர். தடவிப் பார்ப்பதன் மூலம், ஒரு குருடனுக்கு யானை உரலாய் இருந்தது. அவன காலைத் தொட்டுப் பார்த்தவன். மற்றொருவனுக்கு யானை முறமாக இருந்தது அந்தக் கபோதி காதைத் தொட்டுப் பார்த்தவன். இன்னொருவனுக்கு, யானை 'துடைப்பம்' போல் இருந்தது அவன் வாலைத் தொட்டவன்! இப்படிக் கதை உண்டல்லவா! அதுபோல, நமது திட்டத்தின் முழு உருவையும், பொருளையும் தெரிந்துகொள்ளாதவர்கள், தந்தமது பார்வைக்குப் பட்ட பகுதி மட்டுமே நமது திட்டம் என்று கருதிக் கொண்டு பேசுவர், ஏசுவர்.

119. திறமையும் விவேகமும் உள்ள இசைவாணன், ஒரு துளி 'ஸ்ருதி' கலை

யும்போதே உணர்ந்து கொள்வான். மட
டரகவித்வான், சபையோர் கைகொட்டி
நகைத்த பிறகும், ஏன்? என்ன விஷயம்?
என்று கேட்பான்.

120. ராஜாக்களைச் சிறைப்படுத்தி,
ரஜ்வியைப் பிடித்து நிஜாமின்
ஆட்சி முறையை மாற்றி ஹைதராபாத்
சமஸ்தானத்தில் மக்களாட்சியை எப்படி
அமைப்பது என்ற மகத்தான இலட்
சியப் பாதையிலே, குறுக்கே நேரிட்ட சம்
பவங்கள் எப்படியோ, அதைப்போலவே
தான் நாட்டுக்குப் புதியதோர் நிலையை
அமைக்க வேண்டும் என்ற எங்கள் இலட்
சியப் பாதையிலே செல்லும் போது, எங்
களுக்கு ஏற்படும் சிரமங்களுக்காக மந்திரி
சபையைக் கண்டிப்பது என்பவைகளைக்
கொள்ளுகிறோமே யொழிய இவைகளே
தான் எமது வேலை என்று எண்ணும்
ஏமாளிக ளல்ல, நாங்கள்,

121. ஆளைப் பிடித்து, மிருகத்தன மான முறையிலே அடித்துக் கொன்று போடும் காட்டு மிராண்டி முறை மாறி, ஒரு சிறு ஊசியில் விஷத்தைத் தோய்த்து வைத்து அதனால், அவனும் அறியா வண்ணம் குத்தி ஆளைச் சாகடிக்கும் சாக சக் கொடுமை வளர்ந்திருப்பது போலவே இன்று, ஒரு நாடு மற்றோர் நாட்டின் மீது ஆதிக்கத்தைப் புகுத்துவதற்கு மிகமிக இலகுவான முறைகளைக் கற்றுக் கொண் டுள்ளன, வல்லரசுகள்

122. கோபமோ, பயமோ கொள்ளா மல், உபதேசம் கேட்டு உண்மையை அறிந்து கொண்ட உத்தமச் சீடன், குரு வின் முன் கை கட்டி நிற்பது போல முத லாளிகளின் முன் நின்று, இலாப நோக் கத்தை விட்டு விடும்படி கூறவில்லை.

123. தந்தை மரணப் படுக்கையில் இருக்கையில், தனக்காக வேண்டிய சொத்

தைப் பிறர் களவாடிய சேதியை ஆதாரத தோடு கேட்ட 'வார்சுதாரன்' மேஜரான தும், அந்த புஞ்சை நிலம் விற்பனையான தாக இருக்கும் பததிரம் செல்லாது. அதிலே காணப்படுவது எங்கள் தாயின் கையெழுத்தல்ல, கள்ளக் கையொப்பம்! மேலும் சொத்து பிதுராஜ்ஜிதம், ஆகவே எமக்கு உரியது, என்று வழக்குத் தொடுக்கிறன். அதுபோல, 'நாங்கள் அறியாப் பருவத்தில் இருந்தபோது' அநீதி கள் இழைக்கப்பட்டன, உரிமைகள் பறிக கப் பட்டன. இன்று நாங்கள் பரிகாரம் கேட்கிரேம், உரிமைகளைத் திரும்ப அடையவேண்டும். என் நாட்டுப் பழங்குடி மக்கள், பகுத்தறிவு மன்றத்திலே வழக்குத் தொடுத்துள்ளனர், நாட்டிலுள்ள நானு வித கிளர்ச்சிகளுக்கும் காரணம் இது தான். தன்னை அறிந்து, தனது உரிமை கேட்பவர், தன் மானம் நடத்தும் போர் இது.

124. ஒரு அரசன் கொடுங்கோல னாக இருக்கிறான் எனறால், அவனை உருட்ட, புரட்சிக் கிளம்புவதைக் காண் கிறோம். ஒரு சில செல்வவான் செருக் குடன் வாழுவது கண்டால், அவர்களின் ஆட்சியை அழிக்க, அகோரப்புரட்சி கிளம்புவதைக் காண்கிறோம். வண்டியில் பூட்டிய மாடு வலி தாஙகாது, காலால் உதைத்து வாலால் அடித்து முரண்டிப் படுததுக் கொண்டோ, மூலைவாரியோ, பள்ளததில் வண்டியை உருட்டியோ, புரட்சி நடத்துவதைப் பார்க்கிறோம். புழு வும் கால்மிதி அதிகமானால், துடித்துக் கடிக்கக் காண்கிறோம். இந்த சமுதாயத திலே மட்டுந்தானே, ஒரு வகுப்பு அந்த நாள் தொட்டு இன்றுவரை, அத்திரி அகஸ்தியர் காலந்தொட்டு ஆசசாரி சாஸ் திரி காலம் வரையிலே, மற்ற வகுப்பி னரை 'இழிமக்கள்' எனக்கூறி, அந்தப் படியே நடத்திவரக் கண்டும், அதன்

கொடுமை ஏக காலததிலே, இருதயத திலே எண்ணுயிரம் ஈட்டிகள் குத்துவது போன்று இருக்கக் கண்டும் உலக நாகரீ கமும், அறிவின் வளர்ச்சி மனிதத் தன் மையின் மேம்பாடு, உலக நிகழ்ச்சிகள் எனும் அறிவுச்சுடர்கள் அனேகம் வீசி யும், நீங்காது குறையாது குன்ருது நிலைத் திருக்கக் கண்டும், புரட்சிப் பொறிகள் கிளம்பாது இருக்கும் நிலை உள்ளது?

125. ஆணிவேர் ஒன்று-அடி மரம் ஒன்று - ஆனல் கிளைகள் பல உண்டு. செயற்கை ஒட்டல்ல, இயற்கையின் கூறு இனம், மொழி, கலை ஆகியபண் பாடு நம் இருவருக்கும் - தமிழர்க்கும் தெலுங்கர்க்கும் அடிப்படை, தமிழர் தெலுங்கர் இருவரும் திராவிட இனத்த வர். தலையைக் கொடுத்தேனும், தலைநகர் பெறவேண்டியதுதான். ஆனல் அதற் காக நமது வழித்தோன்றல்களின் வாழ் வைக் கருக்கவும் பிடியைப் பிறரிடம் சிக்

கவைக்கவும், நாம் தலையைக்கொடுத்துத் தலைநகர் பெறுவது கூடாது.

## ஆரியக் கிருஹத்தில்

126. சுவர் இருந்தாலன்றே சித்திரம் எழுத முடியும்' உயிர்இருந்தாலன்றோ உயர்வு, வெற்றி எதுவும்? ஏ! பிரியே! என்னைக் கொல்லவரும் இவனிடம் சென்று அடிபணி! தாமரைத தடாகம் போன்ற கண்களிலிருந்து நீரைப் பொழிய விடு! மாங்கலியப்பிச்சைகேள். அவன் வேண்டுவதை எல்லாம் தருவதாகச் சொல். நம்மை உயிரோடு விட்டால் போதும். கோடி கோடி புண்ணிய முண்டு எனக்கூறு! போ போ, விரைந்து செல் புலம்பு! புறப்படு!

## தமிழர் மனையில்

வாளாயுதத்தினல் காயம் அடைந்துள்ள, வீரம் செறிந்த என் கணவர், இங்கே படுததிருக்கிறார். அவரது அங்க

மெல்லாம் தையல்கள் காணப்படுகின்றன பாடகரே! தயவு செய்து வீராவேசம்ததும் பும் தங்களுடைய போர்ப் பாட்டுகளை நிறுத்துங்கள்; இல்லையேல், புதிதாக ஏற் படும் மனப்புண்களுடன், யுத்தகளத்துக்கு அவர் ஓடி விடுவார்!

127. பயனில்லாத வாழ்க்கை பரிமள மில்லாத புஷ்பத்தைப் போலிருக்கும்.

128. அடிமைத்தனம் ஒரு கூட்டுச சரக்கு.

129. குன்றுபோல் அன்னம் குவிந் திருந்தாலும்; நீண்ட நாள் பசியோடு இருந்தவனும், வேண்டுமளவுமட்டும்உண் ணலாமேயொழிய, குன்றைக் கரைத்திடு வேன் என்ற முறையிலேயா தின்பான்? பல ஆண்டுகள் பாடுபட்டு, பலர் கஷ்டப் பட்டுப் பெற்ற அதிகாரம்தான்! - அதற் காக, கிடைத்த அதிகாரத்தை, யார்மீதா வது, என்ன காரணத்தைக் கூறிக்கொண்

டாவது, பிரயோகித்துக் கொண்டே இருக்க வேண்டியதுதானு?

130. சுலபத்தில் வெற்றி தேடுபவர், கஷ்டம் அதிகமின்றிப் பலன் பெறுபவர், ஒட்டுச் செடிகளைப்போல, ஏற்கனவே உள்ள சில விஷயங்களைத் தாமும் கூறிக் காரியத்தை முடித்துக் கொள்வதை உலகில் காண்கிருேம். ஆனுல், பெரியார் இம் முறையில் ஈடுபட்டு இன்றுள்ள நிலையை எய்தவில்லை.

131. தமிழ்ப் புலவர், வரலாற்றுப் போதகாசிரியர் வேலைசெய்வதை, பெரும்பாலோர் ஏற்க மாட்டார்கள் அல்லவா? டாக்டருக்குத் தோட்டச் சுவர் எப்படி கட்டவேண்டும் என்று தெரிந்திருக்கலாம், ஆனுல், அவரிடம் மருந்துக்குப் போவார்களே தவிர, கட்டிடப் பிளானுக்குப் போகமாட்டார்க ளல்லவா. அது போலவே, மேனுட்டுப் புலவர்கள் யாரா

வது இன்று 'பால் பாடிய பாவும் பசீப்பிக் கடலும்''பீடர் பாடிய பாசுரமும் பிரிட்டானிய சரிதமும்' என்று பேசிக்கொண்டிருச்கிருர்களா, 'குங்கிலியக் கலயநாயனரும் குறுகிய மன்னர் வரலாறும்' என்று இங்கு, இவர்கள் பேசிக்கொண்டிருப்பது போல?

132. புராண ஏடு படித்தோர், சரித உண்மைகளையா சபையிலே வீசத் துணிகிருர்கள என்று கேட்கிறேன். கணித மேல் படிப்பிலே நேர்க்கோடு, குறுக்குக் கோடு. வட்டம் முதலியன உண்டு; ஆனல், நீறுபூசியும், நாமதாரியும், பொட்டுக்காரரும்—குறுக்குக் கோடு, நேர்க் கோடு, வட்டம் என்ற கணித சாஸ்திர உண்மைகளையே நாங்கள் தரித்துக் கொண்டிருக்கிரும்; ஆகவே, மதக்குறிகளிலே கணித உவமைகள் உண்டு என்று பேசுவது முறையா?

133. மோட்டார் கண்டு பிடிக்கப்பட்டு, ஓடும்போது ஆகாயவிமானம் கண்டுபிடித்

தவன் புகழப்படுகிறுன் — மோட்டார் கண்டு பிடித்தவனைவிட அதிகமாக. அந் தநிலையிலே மோட்டாருக்கு, 'புதுமெருகு' பூசியவனுக்குப் பொற்பதக்கம் தருவது செயற்கரிய செயல்தான் என்று! அது போல், உலகிலே புது மார்க்கங்களைக் கண்டவர்கள் வேறு வேறு.

134. சேரன், செங்குட்டுவன் போன்ற வேந்தர் தலைவர்களைப் பற்றியாவது பேசினுல், வீரமாவது பிறக்கவழி ஏற்படலாம். அதை விட்டு, சந்தனம் காண முழங்கையைத் தேய்த்தவன் கதையும், ஓடு மறையை ஓலமிட்டவன் கதையும், பண்டாரங்கட்குச் சோறிட்டுப் பராரியானவன் கதையும், மூக்கறுத்தவன், நாக்கறுத்தவன் கதையும் பேசிக் காணப் போகும் பயன் என்ன?

135. விசித்திர வைதீகர்களை, வீதி சிரிக்கச் செய்தார் சாக்ரடீஸ்! உலக

முணராதவர்களுக்கு அது உருண்டை என்று உரைதது, உதைப்பட்டார் கலிலியோ! வைதீகத்தின் மடமையை வாட்டினார் வால்டேர்! மக்கள் மன்றததுக்கு மதிப்புத் தர வேண்டுமென்றார் ரூசோ! வேத புத்தகத்தை விற்று, விபசார விடுதிக்குப் பணம் தரும் போகிகளைக் கண்டித்தனர் விக்ளிப் ஜிவிங்கிலி, மார்டின் லூதர் போன்றோர். அடிமைகளை விடுவித்தார் ஆபிரகாம் லிங்கன்! முதலாளிகளின் கொடுமையை எடுத்துரைத்தார் காரல் மார்க்ஸ்; அவர்களுக்காகப் போராடினார் லெனின். சீனரின் சிறுமதியைப் போக்கினார் சன்-யாட்-சென். துருக்கியரின் மதி தேய்வதைத் தடுத்தார் கமால். இறைவன் பெயர் கூறி ஏழையை வஞ்சித்தவரைச் சந்தி சிரிக்க வைத்தார் இங்கர்சால். பேதைமைப் போக்கும் பணியை மேற்கொண்டார் பெர்னாட்ஷா! வாழ்க்கையிலே வாட்டம், வேதனை, வருமையின் கொடுமை;

வஞ்சகத்தின் ஆட்சி — இவைகளிலிருப் பதை படம்பிடித்துக் காட்டினர், கோர்க்கி டர்கிஞவ், டாஸ்டாவஸ்கி, சிங்களோர் போன்ற எண்ணற்றவர்கள். இவர்களும், இன்னமும் எண்ணற்றவர்களும், தோன் றித் தொல்லைப்பட்டு, தூற்றப்பட்டு, கொடுமைக்கு ஆளாகி, மனித சமூகத் தின் மறுமலர்ச்சிக்காக கொள்கைகளை, புது கேட்பாடுகளை, எவர்க்கும் எதற்கும் அஞ்சாது எடுத்துக் கூறி, பாமரனுக் காகப் போராடியதால், இன்று பல்வேறு நாடுகளிலே மக்களின் மனம் விடுதலை பெற்றது. அடிமை மனப்பான்மை அகன் றது. அதனுல், அங்கு ஒரு நாட்டை இன் னோர்நாடு, அடக்க முடியவில்லை! அடக் கினுல், எரிமலை கக்குகிறது. மக்கள் மன மென்னும் கடல் பொங்கி வழிகிறது. புர ட்சிப்புயல் வீசுகிறது! அதன் முன்பு எந் தக் கொடியவனுலும் நிற்க முடியவில்லை. இங்கே நடக்கும் கொடுமைகளைக் கண்

டித்து, எடுத்துக்கூறி எதிர்த்தவர் பெரியார் ஒருவர்தானே!

136. உழவனின் உள்ளத்திலே புயல் இருக்குமானால், வயலிலே வளம் காண முடியாது.

137. அடக்கி வைத்திருந்த சோபம் கரையைப் பிளந்துகொண்டு வரும் வெள்ளம் போலாகும்.

138. அழகு ஒரு ஆபத்தான ஆயுதம்.

139. ஒய்யார ஓடம்! அதிலே உல்லாச வாழ்வினர்! அவர்களின் உள்ளமோ, களிப்பு மது உண்ட நிலை, பாய்மரத்திலே, பழுது! நிலைமை என்ன ஆகும்? அதுபோலவேதான், இன்றைய காங்கிரஸ் கட்சிக்கு அதிகாரம், அமோகமான ஆதரவு. ஆனால், அவர்களின் சுபாவம், பழுதுப் பட்ட பாய்மரம்கொண்ட ஓடத்துக்குச் சமமாகி வருகிறது.

140. சொந்தச் சொத்தை நிர்வகிக்க முடியாத அபலை, தனவானிடம் அதைக் கொடுத்துவிட்டு, மாதந்தோறும் சீமான் வீடு சென்று, செலவுக்குப் பணம் கேட்டுப் பெறும் பரிதாபநிலைதான் மாகாணத்துக்கு. இதற்காகவா மார் தட்டித்தோள் தட்டி மொழி வழி மாகாணம் அமைத்தோம்? என்று கேட்கும் தமிழர் எங்கே?

141. தொடர்பு, தோழமைக்கும் வழி தேடும், வழக்குக்கும் வம்புக்கும் இழுத்துச் செல்லக்கூடும். அண்ணன் தம்பிகள் ஒருமனை வாழவும் முடியும்! பாகப் பிரிவினைக்கு வழக்கு மன்றம் ஏறி அலுக்கவும், அவர்களால் ஆகும்!! அதைப் போல தமிழரும், ஆந்திரரும் ஒருமனை வாழவும் முடியும்; வேங்கடத்துக்கு இப்பக்கம் ஓர் படையும் அப்பக்கம் ஓர் படையுமாக நின்று களம்புகு காதை நடத்தவும் முடியும்.

142. ஆரியமும் திராவிடமும் ஒன்ருகிவிடவில்லே! ஆகவே தான், ஆரியத்தைக் கண்டிக்கும்போது, திராவிடத்தின் மேன்மையைப் பேசும்போது, கோபமும் கொந்தளிப்பும் எதிர்ப்பும் இடையூறும் வருகிறது, என்பதை அறிந்தோம். உடன்கட்டை ஏறுதல் கூடாது என்றுபேசி, அந்தத் தீய வழக்கத்தால் வரும் கேடுகளே எடுத்துரைத்தால், யாருக்குத்தான் எதற்காகத்தான் கோபம் வருகிறது! வருவதில்லே! ஏன்? உடன் கட்டை ஏறுதல்— இன்று இல்லே அது போலவே, ஆரியம் அழிந்துபோயிருப்பினும் சரி, அல்லது, திராவிடத்துடன் இணைந்துபோ யிருப்பினும் சரி, அது பற்றிய கண்டனம் உரைக்கும் போது யாருக்காவது கோபம் வருமா? வரலாகுமோ? எதிர்ப்பு பிறக்குமா? கோபம் சரமாரியாக வருகிறதே! அதன்

காரணமென்ன? செத்த பாம்பு படமெடுக்காதே!

143. மலரிடம் மங்கையருக்கும், தேனிடம் வண்டுகளுக்கும் ஏற்படும் பிரேமைபோல, குழந்தைகளுக்குத் தாயிடம் பாசம் ஏற்படுகிறது.

144 தமிழரின் ஏடுகளி லெல்லாம் இன்று தமிழர் திருநாள் பற்றிய திருமுகங்கள் காண்கிறேம். ஒன்று கூடும் வேளே! ஆம்! ஒன்றுகூட வேண்டிய கட்டம்! திரை, நைந்து இருக்கிறது. மற்றும் ஓர் சிறு முயற்சீ போதும், திரை நிச்சயம் கிழிந்து விடும். தமிழருக்குள் காணப்படும் உட்பகை ஒழிந்து கடும் விடுதலே வெற்றி விழாவுக்கு வழி ஏற்பட்டு விடும்.

145. கள்ளங் கபடமற்று விளேயாடும் இளேஞனேக் காணும் கபட நெஞ்சங்

கொண்ட வயது வந்த நொண்டி, தான் விளையாட முடியாம லிருக்கும்போதுஅவ் விளைஞன் மட்டும் விளையாடுவதா என்று பொறுமை யுள்ளங்கொண்டு கல்லெடுத் தெறிந்து இளைஞனின் காலில் படுகாய முண்டாக்க நினைப்பது என்பது சாதாரண மாக நடைமுறைப் பழக்கத்தில் சில இழி குணம் படைந்தோரிடத்து இருக் கக் காண்கிறோம். அடிபடும் இளைஞன் காயத்தைத் தேற்றிக்கொண்டு நடமாடு வது போல், "திராவிட நாடு"ம் தன் மேல் உதிர்க்கப்படும் அடக்கு முறைக் குண்டுகளைத் தாங்கிகொண்டு, தன் இலட் சியப் பாதையில் சளைக்காமல் செல்லவே விரும்புகிறது.

146. "திராவிடநாடு" தன்னைப் பின் தொடர்பவர்கள் எளிதில் வந்து சேர, நடந்து செல்லும் வழியைச் செப்பனிட் டுக் கொண்டே வந்திருக்கிறது. இனியும்

செப்பனிட்டுக் கொண்டே செல்லும். வழியில் காணப் படும்சகுதனச் சருக்கல்களைப் போக்கியும், வருணாச்சிரம வளைவுகளை நிமிர்த்தியும், மூடப்பழக்க மென்னும்முட் புதர்களை அழித்தும், குருட்டு நம்பிக்கை என்னும் கொடுங்கள்ளிகளை வெட்டியும் பழமைப் படுகுழிகளைத் தூர்த்தும், அவற்றிலே நெளியும் புராணப் பாம்புகளையும் இதிகாசக் கொடுந் தேள்களையும் கொன்றும், தொண்டு செய்து வருகிறது.

147. வாழ்க்கைத் துறையிலே மிக முக்கியமான-ரசமான கட்டம் காதல்.

148. சொல்லிலே ஏற்படும் மாற்றம் சொல் அளவினதல்ல— கருத்தினுக்குக் கருவியன்றோசொல்! எனவே, சங்கராந்தி தமிழர் திருநாள் ஆனது, ஒரு பதத்துக் குப்பதில் வேறொன்று என்று ஏற்பட்ட தல்ல. ஒரு கருத்து ஒழிந்து, பிறிதோர் கருத்து மலர்ந்ததைக் காட்டுவதாகும்.

அதைப் போலவே, கன்னிகாதானம்—திருமணமாகி, திருமணம் இன்று வாழ்க்கைத் துணை ஒப்பந்தமாகி யிருக்கிறது.

149. அமைவது, அமைக்கப்படுவதை விடச் சிறந்தது—பூத்திடும் மலர் போல், பல வர்ணக்காகிதம் கொண்டு மலரைச் செய்திடலாம்—செய்யப்படும் பொருளிடம் மணமிராது.

150. சிங்கத்தைக் கண்டு, சிறுநரி மறைந் தொழியலாம். ஆனால், சிங்கததை சிங்கமே கண்டு அஞ்சுவதென்ருல், அச்சுறுத்தும் சிங்கத்தின் ஆற்றல் பெரிதென்றுதான் கூறவேண்டும். அத்தகைய நெஞ்சுரமும், உடல் வன்மையும், கொள்கையால் பற்றும் கொண்டு வாழ்ந்தவர் அழகிரிசாமி அவர்கள்.

151. கூட்டை விட்டுப் பறந்து நெடுந் தூரம் சென்று, இரைதேடி உண்டு, இடையே இனிய குரலால் சிலரை மகிழ் வித்து, திசைபற்றிக் கவலையின்றி, தங்கு மிடத்தைத் தன் இடமாக்கிக் கொள்ளும் பாடும் பறவையானர். வ. ரா. பிறந்த இடம் அக்ரகாரம், இருப்பிடமோ போர்க் களம்—போர்க்களம் மட்டுமல்ல, இரு தரப்புப் படையினரும் வீசும் கணைகள் விழும் இடம் அவர் மீதும் சிலபல தைக் கும்.

152. கடிவாளம் சிறியது. ஆனால் குதிரை அதனிடம் படும்பாடு யாவரும் அறிந்ததுதான். மூக்கணாங்கயிறு தனது வால் பருமன் கூடத்தான் இல்லை. ஆனால் மாடு அதனிடம் அகப்பட்டால், அடங்கித் தான் ஆகும். அதைப்போல சிறிய சமூக மாயினும் அதற்கு ஏதேதோ மகத்துவத் தைக் கற்பித்து விட்டால், பிறகு அந்த

சமூகத்தவரின் செல்வாக்கு நிச்சயம் வளரும்.

153. எந்தச சமயத்தில், எந்தக்கட்சி வலையில் வீழ்கிறதோ அதை வைத்துக் கொண்டு தன் வாழ்வை நடத்தத் தீர்மானித்திருக்கிறது ஏ கா தி ப த் தி ய ம். கோழிச் சண்டை—மாட்டுச் சண்டை—குஸ்தி—இவைகளை நடத்தி வைக்கும் காசு திரட்டிகள் இருக்கிறார்களல்லவா? அது போலாகி விட்டது, ஏகாதிபத்தியம்.

154. நல்ல மாடி வீட்டிலே அழகான பூந்தொட்டிகளை அலங்கார வரிசையாக வைத்துக் காட்டு கிறார், வ. ரா. அழகிய உயர்தரமான கோட்! அதிலே பூச்செண்டு செருகி விடுகிறார் காண்டேகர். பாரதி தாசன் பூங்காவையே அமைத்துத் தருகிறார். காகிதப் பூஞ்சோலை, தழைமாலை, இவைகளையே தயாரிப்பவர்களும் உண்டல்

லவா. அவர்கள் போலல்ல வ. ரா. வும் காண்டேகரும். ஆனால் அவர்கள் செய் யாததைப் புரட்சிக் கவிஞர் செய்தார்.

155. ஒட்டகத்துக்கு ஒரு சுபாவம் உண்டு என்று சொல்வார்கள். அதன் மீது பாரத்தை மேலும் மேலும் போட் டால், பளு தாங்கமாட்டாமல், ஒட்டகம் முரண்டுக் கொண்டு படுத்து விடுமாம்! உடனே சூட்சம புத்தியுள்ள ஒட்டகக் காரன் கடைசியாக ஒட்டகத்தின் மீது ஏற்றிய சாமானை எடுத்து விடுவானாம்— எடுத்தானதும் ஒட்டகம், சரி, சரி நம்மீது போட்டபாரத்தைக் கீழே இறக்கிவிட்டார் கள், நாம் வெற்றி பெற்று விட்டோம், என்று எண்ணிக்கொண்டு, எழுந்து நிற் குமாம், பிரயாணத்துக்குத் தயாராக! இந்த ஒட்டகத்தின் சுபாவத்தை ஒரு சில சமயத்திலே, நல்லவர் களிடமும் காண லாம். யாராவது நல்லவர்களுக்கு மன

வேதனை ஏற்படும் படியான தொல்லைகள் ஏற்பட்டால், தாங்க முடியாத நிலை உண்டாகும். உண்டாகும்போது இனிப் பொறுக்க முடியாது என்று கூறுவர். ஆனால் ஒட்டகத்தின் சுபாவ சூட்சுமம் தெரிந்தவர்கள், கொடுத்த தொல்லைகளிலே ஏதாவதொன்றை நீக்குவர்—நீக்குவதன் மூலம, நல்லவரின் மனதிலே சஞ்சலம் குறைந்து, மகிழ்ச்சி மலர்ந்து, சொன்ன வண்ணம் கேட்கும் நிலை பெறுவதுமுண்டு.

---